உ

குணாலயவிநாயகர் துணை.

திருவொற்றியூர் என்னும்

ஆதிபுரி

நிரோட்டகககரயமகவந்தாதி

மூலமும் உரையும்.

கோணாங்குப்பம் - சித்திரகவி

க. தி. கந்தசுவாமிகவிராஜரவர்களால்

இயற்றியன.

அஷ்டாவதானம் - பூவை

கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மார்கட்

சி. தியாகராயப்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி,

ஷை கவிராஜர் குமாரர்

தி. க. கிருபாசங்கர ராஜா

அவர்களால்,

சென்னை:

இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1897.

23/3/97

குணாலயவிநாயகர் துணை.

திருவொற்றியூர் என்னும்
ஆதிபுரி
நிரோட்டக ககர யமகவந்தாதி
மூலமும் உரையும்.

கொளாஞ்சூர் - சித்திரகவி

க. தி. கந்தசுவாமிகவிராஜரவர்களால்

இயற்றியன.

அஷ்டாவதானம் - பூவை

கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மார்கட்

சி. தியாகராயப்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி,

ஷை கவிராஜர் குமாரர்

தி. க. கிருபாசங்கரராஜா

அவர்களால்

சென்னை:

இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1897.

உ

பரமபதிதுணை.

சாத்துகவிகள்.

முருகதாசசுவாமிகளென்றும் திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்
விளங்குகின்ற

ஸ்ரீமத்-தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்த

நேரிசைவெண்பா.

கந்த சுவாமிக் கவிஞனொற்றி யூரில்வளர்
சுந்தரத்தி யாகருக்குச் சூட்டியதா—மிந்தக்
கவியருமை மூதுணர்ந்த காருணிய ரோர்வா
ரவிரிறுமாப் பாளரறி யார்.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

ககரத் திதழக லந்தாதி ணர்ச்சேர்ந்த கட்டடரா
ககரத் திதழக லந்தாதி யர்கடங் கல்லெனத்தே
ககரத் திதழக லந்தாதித் தானத்தின் கங்கரத்நன்
ககரத் திதழக லந்தாதிக் கிடிலைக் காணரிதே.

இந்நூல்செய்தவரின் மாணாக்கர்களில்
ஒருவராகிய

கோ. சுப்பராயகிராமணியவர்களாற்செய்த

கட்டளைக்கலித்துறை.

சிகரந்தனிலம் புலியினனொற்றிச் சிவனடியில்
நிகராறுகந்தசு வாமிப்புலவ னிரோட்டகமாங்
ககரயமகவந் தாதியைக்கூறினன் காசினியில்
பகரவிதனுக் கிணையுளதோ தமிழ்ப் பாவலரே.

புதுவை

குமாரவேற்கவிராயரவர்களாற்கூறிய

நேரிசைவெண்பா.

மன்னு கொரஞ்சைநகர் வாழ்கந்த சாமிவேள்
உன்னுமக் தாதி யுகந்துரைத்தான்—பின்னுசடை
மேவுதிரு வொற்றி விமலத்தியாகரின்மேல்
ஆவலுட னெஞ்சகத்தி லாய்ந்து.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

'மகபதிசென்றிறைஞ்சுமெழி லொற்றிநகர்த்தியாகேசர் மலர்த்தாண்மீதே, யகமகிழ்வினொடுககர யமகமெனுமக்தாதி யணிந்தானன்பாய்ச், சுகமுலவுபொழிலாரங் கொரஞ்சைவள ம்பதிவாழுக் தூயோன்சேடன், றகவயர்ந்துகரக்குமிகு நன்ண றிஞன்மதிகந்தசுவாமிமாலே.

இந்நூலாசிரியர் குமாரர்

தி. க. கிருபாசங்கர ராஜாவவர்கள்

இயற்றியன.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

புத்திரனாய்நின்னிடத்துநான்பிறந்துமென்னபயன்
புலவோர்போற்ற
இத்தரையெங்கணும்பரவியுன்னரியபெரும்புகழை
யெடுத்துரைக்கும்
உத்தமநிரோட்டககரயமகவந்தாதி
யொண்சேய்தன்னை
ஒத்திடுவனேகந்தசாமிகவிராஜவென்
னுயர்பிதாவே.

நேரிசைவெண்பா.

ஒற்றியினில் மேவு முமாபதிக்கு முத்தமிழுங்
கற்றகந்த சாமிக் கவிராஜன்—சொற்றிட்டான்
ஆய்ந்த ககர யமகத்தி லந்தாதி
ஏய்ந்தபுல வோரேத்த வே.

உ

கணபதிதுணை.

திருவொற்றியூர் என்னும் ஆதிபுரி நிரோட்டக ககரயமக வந்தாதி மூலமும் உரையும்.

விநாயகர்காப்பு.

மணக்குஞ்சரமதன்மாலயனேத்தொலிமன்னுகிள்ளை
வணக்குஞ்சரவம்பயில்வனமொற்றிநன்மானிலத்தர்
தெணக்குஞ்சரமதலைப்புயரந்தாதியையுரைக்கக்
குணக்குஞ்சரமலர்த்தாளிணைகாப்பெனக்கூறுதுமே.

(இதன் பதப்பொருள்.) மணக்கும்-பரிமளிக்கின்ற, சரம்-பாணத்தையுடைய, மதன்-மன்மதனும், மால்-விண்டுவும், அயன்-பிரமனும், ஏத்து - துதிக்கின்ற, ஒலி - சத்தங்களும், மன்னு - பொருந்திய, கிள்ளை - கிளிகளின், வணம் - அழகிய, குஞ்சு - இளங்குஞ்சுகளின், அரவம் - சத்தமும், பயில் - பொருந்திய, வனம் - சோலைசூழ்ந்த, ஒற்றி - ஆதிபுரியென்னும், நல் - நல்ல மானிலத்தர்-பெருமைபொருந்தியபூமியையுடையவர், தெண்-தெளிவுபொருந்திய, அக்கு - எலும்புகளும், சரம் - மாலையாகிய மதலை-கொன்றையுமணிந்த, புயர்-தோள்களையுடைய (தியாகேசரின்பேரில்) அந்தாதியை - (நிரோட்டக ககரயமக) அந்தாதியை, உரைக்க - (யான்)சொல்ல, குணக்குஞ்சரம் - குணமுடைய விநாயகரின், மலர் - தாமரையையொத்த, தாளிணை-இரண்டு பாதங்கள், காப்பென-காப்பாக, கூறுதும்-துதிப்போம், என்றவாறு.

உ-ஈற்றசை. இங்ஙனமே யீற்றில்வருந்தோறுங்காண்க.

நூன்முகம்.

ககனகரந்தரைநிகழாதியகத்ததியா
ககனகரந்தனைநிரைத்தாட்கட்கலையனின்கைக்
ககனகரந்தரத்தரென்றேத்தியகந்தரியா
ககனகரந்தநாகதண்ணென்னகக்கஞ்சத்தனே.

(இ - ள்.) ககனககரம்-விண்ணுலகமும், தரை-மண்ணுலகமும், நிகழ் - விளங்கிய, ஆதியகத்த - ஒற்றியூரிலிருக்கின்ற, தியாக-தியாகேசனே, கனம் - மேன்மையானதும், நகு - ஒளிவிடுவதும் அரந்தனை - (பாவிகட்கு) அரத்தினை, நிரை - ஒப்பாகியதுமான, தாள்கள்-(நினது) பாதங்களை, கலையன் - பிரமனும், நின்கை - உனதுகையில்பொருந்திய, ககன் - அம்பாகிய (விண்டுவும்), அனகர் - அகளங்கர், அந்தரத்தர் - அழகியமலையார், என்று - என்று, எத்திய - துதிக்கின்ற, கந்தரி - உமைதங்கிய, ஆக - தேகத்தனே, கனம் - செவிகளில், நகர் - அசைகின்ற, அந்தம்-அழகிய, நாக-பாம்பையுடையவனே, தண் - குளிர்ந்த, என்னகம்-எனதுள்ளமாகிய, கஞ்சத்தனே - தாமரையிலிருப்பவனே. எ - று. (க)

கஞ்சந்தனத்தநிரையாயிழையாய்கரிசறன
கஞ்சந்தனத்தடையச்செயினிதாங்ககனநற்செ
கஞ்சந்தனத்தனயனடராதியின்காசினிய
கஞ்சந்தனத்தனையாதரித்தநற்காரணனே.

(இ-ள்) கஞ்சம்-தாமரையையொத்த,தனத்த-முலையையவாய்ந்த,நிரை - ஒப்பற்ற,ஆயிழையாய் - தோழியே, கரிசறு-குற்றமற்ற, அனகம் - பரிசுத்தமாகிய, சந்து - தூதை, அனத்து - அன்னத்தினிடமாக, அடையச்செய் - போகச்செய்வது, இனிதாம் - இனிமையாகும், ககனம் - பொன்மயமாகிய, நல் - நல்ல, செகம் - பூமியையுடைய, சர்தம் - வடிவுமிகுந்த, நத்தன் - சங்கேந்தியஅரியும், அயன் - பிரமனும், அடர் - நெருங்கித்துதிக்கின்ற,ஆதியின்காசினி-ஆதியாகிய ஒற்றியூரென்னும், அகம் - இடத்தில்வாழும், சந்தன் - அழகன், அத்தன் - கடவுள், எனை-என்றனை, ஆதரித்த-காத்த, நல் - நல்ல, காரணன்-காரணப்பொருள். எ - று.

(க-து.) தோழியே! அன்னத்தைத்தியாகேசன்பால் தூது விடுவாயாக. (௨)

காரணங்கங்கச்சயிலநாகத்ததட்காணெழிலங்
காரணங்கங்கச்சநன்கறச்செய்யரக்கர்க்கடலாய்
காரணங்கங்கச்சடர்தனத்தங்ககனந்தரநின்
காரணங்கங்கச்சநகையாயாதியின்கங்கையனே.

(இ-ள்) கார் - மதசலங்கள், அணங்கு-பொருந்திய, அங்கம்-உருப்புகளைவாய்ந்த, சயிலம்-மலையையொத்த, நாகத்து - யானையின், அதள்-தோலைப்போர்த்தியவனே, காண்-தரிசிக்கத்தகுந்த, எழில் - அழகிய, அங்கா - தேகத்தைவாய்ந்தவனே, ரணம் - யுத்தத்தில், கங்கு - முடிவும், அச்சம் - பயங்கரமும், நன்கு நன்மையும், அற - இல்லாமல், செய் - (போர்) புரிகின்ற, அரக்கர்க்கு - திரிபுரத்தாரை, அடல் - கொலைசெய்ய, ஆய்-புரிந்தவனே, கார் - கறுத்த, அணங்கு - உமையின், அம் - அழகிய கச்சு - இரவிக்கை, அடர் - சேர்ந்த, தனத்து - முலைத்தழும் பேரிய, அங்க - உருவனே, கனந்தர - மேன்மைதர, நின் - உனக்கு, காரணம் - பிரதானமாகும், கம் - வெள்ளிய- கச்சம் மீனெலும்பின், நகையாய் - ஆபரணனே, ஆதியின் - ஆதிபுரியில், கம் - கபாலமேந்திய, கையனே காத்தையுடையவனே.
எ - று. அரக்கர்க்கு வேற்றுமைமயக்கம். (௩)

கங்காநதிக்கலைசார்சடிலத்தினர்காட்டினிலா
கங்காநதிக்கலையாதடராதிநற்காசினிய
கங்காநதிக்கலைதானனையாதெழில்காட்டியதா
கங்காநதிக்கலையாநதிதந்தகனதைநன்றே.

(இ - ள்.) கங்காநதி-பகிரதியும், கலை-சந்திரனும், சார் - சேர்ந்த, சடிலத்தினர் - சடாபாரத்தையுடையவர், காட்டில் - வனங்களில், நிலா-பொருந்தாத, கங்கான-வரம்பாகிய, திக்கு-திசைகளிற்சென்று, அலையாது-வருந்தாமல், அடர் - மேன்மை தரும், ஆதி-அதிபுரியென்னும், நல்-நல்ல, காசினி-பூமியாகிய, அகம் - [illegible] வாழும், கான் அது - அந்தவனத்தின்கண்,

இ-இந்த, கலை-ஆடை, நனையா - நனையாமலும், எழில்-அழகை, காட்டியது - காண்பித்தது (அல்லாமலும்), ஆகம் - தேகத்தில், கான்-வாசனை, அதி-மிகுதியாக, கலையா-கலைந்துவிடாமலும், நதி-(அந்த)நதி, தந்த-கொடுத்த, கனதை-மேன்மை,நன்று-நலமாகும். எ-று. [சுனையாடல்.] தான்-அசை. (ச)

கனகந்தரக்கரர்தண்டரங்கத்தடர்கார்நிறத்தா
கனகத்தாக்கஙளினத்தினர்திண்கயிலையெழிற்
கனகத்தரக்கணிகழாதிநாடர்நற்காசினியார்
கனகத்தாக்கலங்கற்சென்னியார்திரிக்கண்ணரனே.

(இ - ள்.) கனகம்-பொன்னிறமாகிய, தரம் - மலையை (வில்லாக ஏந்திய), கரர்-கையையுடையவர்,தண்-குளிர்ந்த,தரங்கத்து-சமுத்திரத்தில்,அடர்-நெருங்கிய,கார்-கறுத்த, நிறத்து-வண்ணம்வாய்ந்த, ஆகன்-தேகத்தையுடையவிண்டுவின், அகத்து-உள்ளத்தில், அரக்கு-சிவந்த, அம்-அழகிய, கஙளினத்தினர்-தாமரையிலேயிருப்பவர், திண்-வலிய, கயிலை-கைலையென்னும், எழிற்கல்-அழகியவெள்ளியகல்லாகிய, நகத்தர்-மலையையுடையவர், அக்கண்-அவ்விடங்களில், நிகழ்-விளங்குவதுடன், ஆதிநாடர்-திருவொற்றியூரிலுமிருப்பவர்,நல்-நல்ல, காசினியார்-பூமியிலுள்ளார்க்கு, கனம்-மேன்மைபெற்ற,கத்தர்-கடவுள், அக்குஎலும்புமாலையை, அலங்கல்-அலங்கரிக்காநின்ற,சென்னியார்-சிரசினர், திரிகண்-மூன்றாகிய நேத்திரத்தையுடைய, அரன் - சிவபெருமான். எ - று. (ரு)

கண்ணளினத்தயன்கங்காளதிநற்காசினியே
கண்ணளினத்தரலரக்கினரிணிக்காத்தலதன்
கண்ணளினத்தநற்சந்தடாச்செயின்காரிகைநீங்
கண்ணளினத்தரென்றகாதநீன்கட்கடனினிதே.

(இ - ள்.) கள்-தேன்பொருந்திய, நளினத்து - தாமரையிலிருக்கின்ற, அயன் - பிர்மாவின் (சிரசை), கம் - கபாலமாகத்தாங்கிய,கரன்-கையையுடையவன், ஆதி-ஆதிபுரியென்னும்,நல்-நல்ல, காசினி-பூமியில்,ஏ-அம்பையொத்த,கண்ணன்-

விழியாளின், இனத்தர் - சுற்றத்தார், அலராக்கினர் - பழி கூறினர், இனி - இனிமேல், காத்தல் - காப்பாற்றுதல் அதன்கண் (ஒற்றியூராகிய) அதனிடத்து, அளி-வண்டினை, நத்தம்-(இந்த) இராக்காலத்தில், நல் - உபகரமான, சந்து - தூதாக, அடரச்செயின் - போகச்செய்வாயாயின், காரிகை - தோழியரே, நீங்கள் - நீங்கள், நளினத்தர் - பரிகாசத்தர், என்றுகாத - என்று பேர்கொள்ளாத, நின்கள் - உங்கள், கடன் - கடமையானது, இனிதே - இனிமையாகும். எ - று (வண்டுவிடுதூது)

(க - து) தோழியரே! சுற்றத்தார் என்மீது பழிகூறாதபடி ஒற்றியூரன்பால் வண்டைத் தூதாகவனுப்பி அவரை என்னுடன் சேர்ப்பீராக. (௬)

கடகத்தாரதளினர்சல்லியன்கடந்திகழ
கடகத்தாரடாரதிநகராங்கந்தனிற்சார்
கடகத்தாரடியன்றனஞ்சார்கநற்கன்னிநின்கட்
கடகத்தாரலர்தந்திடச்செய்யிரிக்காசினிக்கே.

(இ - ள்.) கடம்-மும்மதம்பொருந்திய, நகத்து - யானையிடத்து, ஆர் - பொருந்திய, அதளினர் - தோலைத்தரித்த திருமேனியர், சல்லியன் - சுக்கிரனது, கடம்-தேகமானது, திகழ்-பிரகாசிக்கச்செய்த, அகடு - வயிற்றையுடைய, அனகத்தார் - களங்கமற்றவர், அடர் (சகலவளங்களும்) பொருந்திய, ஆதிநகரர் - திருவொற்றியூருடைய, அங்கந்தனில்-தேகத்தில்,சார் - தங்கிய, கள் - தேன், நகு - விளங்கிய, அ-அந்த, தார்-கொன்றைமாலையை, அடியன்-நாயேன், தனம் - முலைகளில், சார்க - சேரும்விதம் செய்ய,நல்கன்னி - நல்லகன்னிப்பருவமாகிய தோழிகளே, நின்கள் - உங்களுடைய, கடன் - கடனாகும், அகத்தார் - வீட்டிலுள்ளவர்கள், அலர்-பழிச்சொற்கள், தந்திடச்செய்யார்-சொல்லமாட்டார்கள், இ-இந்த, காசினிக்கு-பூமியின் மீது, எ-று. (மாலைவேட்டல்) காசினிக்கு வேற்றுமைமயக்கம்.

(க - து.) பிறர்பழிகூறாதவகை தோழியரே! ஒற்றியூரனிடத்திருந்து கொன்றைமாலையை வாங்கிவாருங்கள். மூன்றாமடியெதுகையில் தம் - அசை. (௭)

காசினியந்தரநாகரெண்ணுநியகத்தநியா
காசினியந்தரநாலந்தணர்க்கீகளிறதளா
காசினியந்தரநாணலர்கஞ்சக்கழலறத்தீக்
காசினியந்தரநாயினனீங்கிடக்காணையனே.

(இ - ள்.) காசினி - மண்ணுலகத்தாரும்-அந்தரம் - விண்ணுலகத்தாரும், நாகர் - பாதாளத்தாரும், எண் -(யாவராலும்) நியானிக்காநின்ற, ஆதியகத்த - ஒற்றியூரின்கண் வீற்றிராநின்ற, தியாகா - தியாகேசப்பெருமானே, சின் - ஞானமான, இயம்-சொற்பொருளின், தரம்-பக்குவத்தை, நாலந்தணர்க்கு-சனகாதியருக்கு, ஈ - அருளிய, களிறதளா - யானைத்தோல் போர்வையனே, காசின் நியம் - உண்மையாகிய பொன்னினுக்கு, தரம் - சமானமுள்ள, நாண் - அன்றலர்ந்த, அலர் - புட்பமாகிய, கஞ்சம்-தாமரையையொத்த, கழல்-(உமது) திருவடியை, அற - நீங்க(எதுவான), தீ-கொடிய, காசு - குற்றமானது, இனி அந்தரம் - அளவையின்மேலது, நாயினன் - நாய்போன்றயான், நீங்கிட-(அது) நீங்கும்படி, காண்-கிடைக்கணிப்பாய், ஐயனே - ஐயனே. எ - று. (அ)

காரையன்றந்தகலையனின்றேத்தியகத்தநன்று
காரையன்றந்தகனண்ணுதடைக்கலங்நாணளியாய்
காரையன்றந்தகற்றீங்கலியானலிக்கட்டறநீள்
காரையன்றந்தகக்காநிரையாதினகர்க்கையனே.

(இ - ள்.) கார் - கறுத்த, ஐயன் - விண்டுவும், தந்த - (அவன்) பெற்ற, கலையன் - பிரமனும், நின்று - நேரில்நின்று, ஏத்திய - துதித்த, கத்த - கர்த்தனே, நல்நா - நல்லநாவின், கார் - நீர்சம்பந்தமான, ஐ - சேத்துமம் (தோன்றும்), அன்று - அக்காலத்து, அந்தகன் - யமனானவன், நண்ணுத - சேராதபடி, அடைக்கலம் - சரண்புகுந்தேன், அளியாய் - கிருபைசெய்வாய், கார் - குற்றத்தில், அயன்று - பரதவித்து அந்து - நெல்வண்டுக்கொப்பாகி, அகல் - விசாலமாகிய தீம் - கொடிய, கலியால் - வறுமையால், நலி - வருத்துகின்ற, கட்டு - சம்பந்தத்தை, அற - நீங்க, நீள் - நீண்ட, காரை -

காரைச்செடிகளாலும், அன்று - அல்லது, அம் - அழகிய, தக- தகுதியாகிய, காகிறை-(பல) சோலைகளாலுநிறைந்த, ஆகிநகர்க்கு-ஒற்றியூருக்கு, ஐயனே-தியாகனே. எ - று. ஐயனே அளியாய் என்று கூட்டுக. காண் - அசை. (கூ)

கையனகச்சிலையாகநன்னுகநகையனந்த
கையனகச்சிலையான்றிரிக்கண்ணனிக்காரிகைக்கண்
கையுனகச்சிலையாரணங்கேதனங்கண்ணெழிலீ
கையனகச்சிலையார்ந்திடனீங்கிக்கலங்கினளே.

(இ - ள்.) கை - கரத்தினிடத்திலே, நகம் - மகமேருவை, சிலை - வில்லாகவேந்தி, ஆகம் - தேகத்தில், நல் நாகம் - நல்லசர்ப்பத்தை, நகையன் - ஆபரணமாகத்தரித்தவன், அம் - அழகிய, நகையன் - நந்திமுனியின், அகம்-உள்ளத்தில் விளங்கிய, சிலையான் - விக்கிரகன், திரி - மூன்றாகிய, கண்ணன் - நேத்திரத்தான், இ - இந்த, காரிகைக்கண் - பெண்ணின்மீது, கைய-வெறுக்க, நகு - விளங்கிய, அச்சிலை-உயிர் (அவள் சுதந்தரத்தில்) இல்லை, ஆரணங்கே - தோழியே, தனங்கண் - முலையின்மீதுள்ள, எழில்-அழகிய, ஈகை - பொன்னிறத்தை, அன- ஒப்பாகிய, கச்சில்-இரவிக்கையில், ஐயார்ந்திடல்-அழகுநிறைந்திடல், நீங்கி - பொருந்திடாமல், கலங்கினள் - வருந்துகின்றனள். எ-று. [நற்றாயிரங்கல்.] முதலடி யெதுகையில் அன்- சாரியை. (௧௦)

கலங்கதிரத்தனதிசிரத்தண்ணல்கயலடர்ந்தி
கலங்கதிரத்தரங்கத்தனலிந்திரன்கஞ்சனடைக்
கலங்கதிரத்தசரணடையாதியகத்தனிடர்
கலங்கதிரத்தாறனையறச்செய்திரிக்கண்டகனே.

(இ - ள்.) கலம் - கபாலம், கதிர் - விளங்கிய, அத்தன் - கரத்தனே, நதி- கங்கையை (அணிந்த), சிரத்து-சிரசையுடைய அண்ணல் - கடவுளே, கயல் - சேல்கண்டைகள், அடர்ந்து- நெருங்கி, இகல் - சண்டை செய்து, அங்கு - அவ்விடத்தில், அதிர் - முழங்கிய, தரங்கத்தன் - கடலில்துயின்ற விண்டுவும், அல் - கருமைநிறந்தங்கிய, இந்திரன் - தேவேந்திரனும், கஞ்

சன் - பிரமனும், அடைக்கலம் - தஞ்சமென்று, கதி- மோட்சத்திற்காக, ரத்த-சிவந்த, சரண் - பாதங்களை, அடை - அடைகின்ற, ஆதியகத்தன் - ஒற்றியூரனே, இடர் - சிறுமையினால், கலங்கு-வருந்துகின்ற, இரத்தல்தனை-யாசிக்கின்ற அடியேன் தொழில்தனை, அறச்செய்-நீக்குவாய், திரி-மூன்றாகிய, கண் - நேத்திரம்வாய்ந்த, தகனே - தகுதியானவனே. எ - று.

ஒற்றியூரனே மூன்றாகிய நேத்திரம்வாய்ந்த தகுதியானவனேயென்றுகூட்டுக. அது பகுதிப்பொருள் விகுதி. இரண்டாவதடியில் அதரவென்பதில் அ - அசை. (கக)

கண்டங்கனத்தனல்லாதிநகரன்கயிலையனேர்
கண்டங்கனத்தனஞ்சர்ச்சனர்கஞ்சங்கலைகதிர்தண்
கண்டங்கனத்தனலந்தரத்தார்க்கெழில்காட்டரனென்
கண்டங்கனத்தனண்ணாதளித்தாடிரிக்கட்கனனே.

(இ - ள்.) கண்டம் - கழுத்தில், கனத்தன் - மேகம் போன்ற (விடத்தையுடையவன்) நல்-நல்ல, ஆதிநகரன் - திருவொற்றியூரான், கயிலையன்-வெள்ளிமலையான், நேர்-(அவனது) எதிரில்துதிக்க, கண்டு - பார்த்து, அங்கு - அவ்விடத்தில், அனத்தன் - பிரமனுக்கும், அம் - அழகிய, சர்ச்சனர் - பெரியோருக்கும், கஞ்சம் - தாமரையொத்த, கலை - வஸ்திரத்தின், கதிர் - பிரகாசமும், தண் - குளிர்ந்த, கண் - நேத்திரமும், நங்கம்-இலக்குமியையுமுடைய, நத்தன் - சங்கேந்திய விண்டுவுக்கும், நலம் - நன்மையினால், தரத்தார்க்கு - மேன்பட்டவருக்கும், எழில் - அழகை(தனதுதரிசனத்தை), காட்டு - தெரிவிக்கின்ற, அரன் - கடவுள், என்கண் - என்னுள்ளத்தில், தங்கு - பொருந்திய, அனத்தம் - தீமையை, நண்ணாது - சேராதபடிக்கு, அளித்துஆள்-கிருபையளித்தாளும், திரி - மூன்றாகிய, கண் - விழியைவாய்ந்த, கனன் - கடவுள். எ - று. (கஉ)

கட்கநந்தஞ்சக்கரஞ்சிலைநீள்கதைக்கையனயன்
கட்ககந்தஞ்சக்கரசற்கெழிறனைக்காட்டரதிங்
கட்கநந்தஞ்சக்கரந்தனிற்றேய்த்தகழலனலர்க்
கட்கநந்தஞ்சக்கரஞ்சிதராதியகத்தையனே.

(இ - ள்.) கட்கம் - வாளும், நந்தம் - சங்கும், சக்கரம்- ஆழியும், சிலை - வில்லும். நீள் - நீண்ட, கதை தண்டாயுதமு மேந்திய, கையன் - கைகளையுடைய விண்டுவுக்கும், அயன் கட்கும் - பிரமனுக்கும், அனந்தம் - அனேக, சக்கு - கண்களை யுடைய, அரசற்கு - இந்திரனுக்கும், எழில்தனை - (தனது) அழ கை, காட்டு-தெரிவித்த, அர-பெருமான், திங்கள்-சந்திரனது, கனம் - வட்டத்தினை, சக்கரந்தனில் - பூமியின்மீது, தேய்த்த கழலன் - தேய்த்ததிருவடியையுடையவன், அலர்-புட்பத்தின், கள்-தேனுனது, கம்-(தடத்து)நீரில், நசுத-சிந்த, அம்-அழகிய (அந்நீர்), சக்கரம் - வட்டமாக (நான்குகரைகளிலும்) சிதர் - தெரிகின்ற, ஆதியகத்து - திருவொற்றியூரில்வாழும், ஐயன் - கடவுள். எ - று. மூன்றாமடி யெதுகையில் நம் அசை. (கங)

கத்தையனலனசேகரத்தண்ணல்கரியதண்ணங்
கத்தையனலனண்ணங்கிநிறத்தினன்கண்டிரியன்
கத்தையனலனயந்தரத்திநலங்காட்டெழில
கத்தையனலனந்தந்தடையாதியகக்கடலே.

(இ - ள்.) கத்தை - கட்டாகிய, அனலன் - அக்கினி போன்ற, சேகரத்து - முடியையுடைய, அண்ணல் - கடவுள், கரிய-கருமையாகிய, தண்-தண்ணிய,அங்கம்-சரீரத்தையுடைய, தையல் - உமையின், நலம் - நலத்தினை, நண்ணு - பொருந் திய, அங்கி - அக்கினியின், நிறத்தினன்-வண்ணத்தினன்,கண்- விழி, திரியன் - மூன்றாகவுடையவன், கத்து - பொய்யையு டைய, ஐயன் - பிரமனும், அலன் - கரிய (விண்டுவும்), நயம் - உண்மையை, தர - சொல்ல, தீ - (முறையே) சாபத்தையும், நலம் - நல்லவரத்தினையும், காட்டு-தந்த, எழில்-அழகிய, அகத் து - உள்ளத்தையுடைய, ஐயன் - கடவுள், அலம் - கலப்பை யை, நந்தம் - சங்கினம், தடை-தடுக்கின்ற (வயல்சூழ்ந்த), ஆதி யகம் - திருவொற்றியூரின், கடல் - கிருபைவாரிதி. எ - று.

பொய்யைச் சொல்லிய பிரமனுக்கும், உண்மையைச் சொ ல்லிய விண்டுவுக்கு மெனக்கூட்டுக. (கச)

கக்கசந்தன்னையகற்றிட னீங்கியகந்தனின
கக்கசந்தன்னையர்நிந்தனைசெய்யக்கதிர்தரணி
கக்கசந்தன்னையங்கசன்றன்னாற்கலங்கினளக்
கக்கசந்தன்னையங்கத்ததண்ணாதியகச்சகனே.

(இ-ள்.) கக்கசந்தன்னை-மோகத்தினால் நேர்ந்த வருத்தத்தை, அகற்றிடல்-நீக்குதல், நீங்கி - இல்லாமல், அகந்தனில் - உள்ளத்தில், நக - (உன்னையே) விரும்புகிறாள், கசந்து - (அதனால்) வெறுப்படைந்து, அன்னையர்-தோழியரை, நிந்தனை - பழிச்சொற்களை, செய்ய-புரிகிறாள், கதிர்-கிரணத்தையுடைய, தரணி-சூரியன், கக்கு-தான் விளக்குதலால், அசந்து-சோர்ந்து, அல் - இருட்காலம், நயந்து-விசேடித்து, அங்கசன் தன்னால்-மன்மதனால், கலங்கினள் - வருந்துகின்றாள், அகம் - பருத்த, கசம்-யானைமுகனுக்கு, தன்னை-தாயாகிய உமையின், அங்கத்த-பாகனே, தண்-குளிர்ந்த, ஆதியக-ஆதிபுரியென்னும், சகனே-பூமியையுடையனே(அவளைக்காப்பாயாக) எ - று. [பாங்கியிரங்கல்.] (கரு)

கச்சங்கனதனநங்கையங்கத்தன்கலையடர
கச்சங்கனதனற்கீரரின்றிண்டர்க்கநெஞ்சகத்தில்
கச்சங்கனதனநண்ணிநின்றான்செக்கரைநிறந்த
கச்சங்கனதனச்சீர்திகழாதிகழலகனே.

(இ-ள்.) கச்சு-இரவிக்கையணிந்த, அம்-அழகிய, கனம்-பருத்த, தனம்-கொங்கையையுடைய, நங்கை - உமையின், அங்கத்தன்-தேகத்தன், கலை-செந்தமிழ், அடர்-நெருங்கிய, அகம் - இடத்தைவாய்ந்த, சங்கம்-சங்கத்தினான், அதன்-அதில், நற்கீரரின் - நக்கீரப்புலவரின், திண் - பலம்பொருந்திய, தர்க்கம்-வாதினை, நெஞ்சகத்தில் - மனதிடத்தில், கச்சம் - நிச்சயமாக, கனதனம் - மேன்பட்ட பொன்போல், நண்ணி - மகிழ்ச்சிபொருந்தி, நின்றான் - இருந்தவன், செக்கர் - அந்திப்பொழுதின், ஐ-அழகிய, நிறம்-வண்ணத்தை, தகச்சு - வாடச்செய்யும், அங்கன்-உருப்பினான், அதனம்-அதிசமாக, சீர்திகழ்-சிறப்புவிளங்கிய,

ஆதி-ஆதிபுரியென்று, கழல் - சொல்லாநின்ற, அகன்-பூமியை யுடையவன். எ - று. (கசு)

கழற்கஞ்சனத்தன் சயிலச்சிலையின் கரதலன்சீர்
கழற்கஞ்சனத்தங் கனிறைநலாதிய கன்கலைதி
கழற்கஞ்சனத்தந் தரனீங்கிடத்தார் கனந்தரத்தீக்
கழற்கஞ்சனத்தநடைக்கண்டநங்கையின்காட்சிநன்றே.

(இ - ள்.) கழல் - பாதங்கள், கஞ்சன் - தாமரையை யொத்தவன், அத்தன் - கடவுள், சயிலம் - பொன்மலையை சிலையின் - வில்லாகவேந்திய, கரதலன் - கையையுடையவன், சீர்- (அவன்)சிறப்பை, கழற்கு-துதிப்பதற்கு, அஞ்சனத்து- மை போன்ற, அங்கன் - உருவினனுனவிண்டுவே, நிறை - தகுதியான வன், நல் - நல்ல, ஆதியகன் - திருவொற்றியூரன், கலை - சந்திரன், திகழ்-விளங்கிய, அற்கு-இரவினுக்கு, அஞ்சு-அஞ்சுகின்ற, அனத்தம் - வருத்தங்கள், தரல் - பெறுதல், நீங்கிட - அற்றுவிட, தார்- பூமாலையின், கனம் - மேன்மையை, தர - கொடுத்து, தீ - துன்பங்களை, கழு - கழுவிய, அற்கு - அவள் நிலைமைக்கும், அஞ்சம் - அன்னம்போன்றவளும், சுத்தம்- சங்கின், நடைகண்டம் - ஒழுக்கம் போன்றகழுத்தை யுடையவளுமாகி, நங்கையின் -பெண்ணினது, காட்சிநன்றே - (பெறும்) காட்சிகலமே. எ - று. (பாங்கிபகரல்)

(க - து) ஒற்றியூரனிடத்திலிருந்து மாலைபெற்றுத் தனது துன்பத்தை யொழித்துக் கொண்ட தலைவிக்கு அவர் வருகைநலமேயாம். (கஎ)

காட்சியடையத்தணர்நிரையாதியகத்தனளிக்
காட்சியடையத்தடச்சரந்தானலர்கட்கலங்கிக்
காட்சிப்டையத்தளர்ந்தனவேனைரிற்கரிசிரத்தின்
காட்சியடையத்தனத்தனெந்நாளினிக்காத்திடற்கே.

(இ - ள்.) காட்சி - மோட்சத்தை, அடைய - பொருந்த, தணர் - தண்ணிய(அன்பர்), நிறை - சூழுகின்ற, ஆதியகத்தன் திருவொற்றியூரன், அளி - கிருபையுடைய, காட்சியன் - . டார்

வையாளின், தைய - (மார்பில்)தைக்க, தடம் - நீண்ட, சரந்தான்-பாணமாகிய, அலர்கள் - புட்பங்களினால், கலங்கி - பிரமித்து, காட்சி - அறிவினை, அடைய - எல்லாம், தளர்ந்தனள்-சோர்ந்தாள், நேரில் - எதிரில், கரி - யானையாகிய, சிரத்தின்-தலையினுடன், காட்சி-தோன்றி, அடு-நெருங்கிய, ஐ - ஐந்தாகிய, அத்தன் - கையையுடைய(விநாயகற்கு), அத்தன் - தந்தையன், எந்நாள் - எந்தக்காலமும், இனி - இனிமேலும், காத்திடற்கே - காப்பாற்றுவதற்கே, எ - று. காப்பதற்குச் சோர்ந்தாளெனக்கூட்டுக.(பாங்கியிரங்கல்) (கஅ)

காத்திடத்தக்கனலத்தினன்சிரனகத்தனெழிற்
காத்திடத்தக்கனஞ்சேரெழிலாதியகன்சயிலன்
காத்திடத்தக்கனங்கத்தினினங்கைக்கனத்தனிடர்
காத்திடத்தக்கணைந்திடநின்றகயிலையனே.

(இ - ள்.) காத்திடத்தக்க - இரட்சிக்கத்தக்க, நலத்தினன் - நன்மையுடையவரான, சீர் - சிறந்த, அனகத்தன் - நிருமலன், எழில் - செழிப்பாகிய, கா - சோலைகள், திடத்த - தழைத்திராநின்ற, கனஞ்சேர்-மேன்மைபொருந்திய, எழில் - அழகிய, ஆதியகன் - திருவொற்றியூரன், சயிலன் - பர்வதராசன், காத்த - வளர்த்த, இடத்து - இடப்பாகத்தில், அக்கன் - எலும்புமாலையையணிந்த, அங்கத்தினில் - (தனது) தேகத்தினில், நங்கை - உமையவளை (அமர்த்தி), கனத்தன் - மேன்மைப்பட்டவன், இடர் - துன்பமாகிய, கா - வருத்தத்தை, திடம் - வலிய, தக்கன் - தட்சகன், அணைந்திட - பொருந்திட, நின்ற - (காரணமாக) இருந்த, கயிலையன் - வெள்ளியங்கிரியான். எ - று, உமையவளை இடப் பாகத்திலமர்த்தி எனக்கூட்டுக. (ககூ)

கயிலையகத்தகழனேர்ந்தரியெழில்கஞ்சகத்தன்
கயிலையகத்தககண்ணிடச்சிரிடர்காட்டியகய்
கயிலையகத்தகனந்தாஞ்செய்யசங்கஞ்செறிந்தஞா
கயிலையகத்தகணையனேராதியவாகதியே.

(இ - ள்.) கயிலைய - வெள்ளிமலையிலிருக்கின்ற, கந்த - கர்த்தனே, கழல் - உன்பாதங்களை, சேர்ந்து - சேர்ந்து, அரி - திருமாலும், எழில் - பிரகாசம்பொருந்திய, கஞ்சம் - தாமரை மலரிலிருக்கின்ற, கத்தன் - பிரமனும், கயில் - வெறுப்பில்லாமல் (துதிக்கின்ற), ஐய - ஐயனே, கத்து - பொய்யை, அகம் - உள்ளத்து, நண்ணிட - பொருந்திய(பிரமனும்), சீர் - (விஷ்ணுவின்)சிறப்பையும், இடர் - துன்பத்தையும், காட்டு-தெரிவித்த, அய்ய - ஐயனே, நகயில் - சிரிப்பினால், ஐ - அழகிய, அகம் - திரிபுரங்களை, தகனஞ்செய்ய - எரித்துவிட்ட, சங்கம் -பாஞ்சசன்னியம், செறிந்த - பொருந்திய, கை - கரதலமும், இலை - ஆலிலையே, அகம் - இடமகன்ற, தகு - தகுந்த, அணையன் - பஞ்சணையாகவுடையதிருமால், நேர் - நேர்ந்து (வாழுகின்ற), ஆதியகா-திருவொற்றியூரனே, கதி - (நின்சரனே)கதி. எ - று. பிரமனது துன்பத்தினையும் எனவும், எரித்துவிட்ட ஒற்றியூரனே யெனவுங்கூட்டுக. தான்-அசை. (௨௰)

கதிநலந்தந்திடநின்றதண்ணாதியகத்தகளங்
கதிநலந்திகழ்தாரணியானயன்காயரஞ்ச
கதிநலந்தந்தியனார்க்கைச்சிலையங்கசன்சரத்தின்
கதிநலந்தந்திறங்கண்டிலனென்னகளியரனே.

(இ - ள்.) கதி - மோட்சத்தின், நலம் - நன்மையை, தந்திட - அடியாருக்குக்கொடுத்திட, நின்ற - இருந்த, தண் - தண்ணிய, ஆதியகத்து - திருவொற்றியூரில், அகளங்க - பரிசுத்தனே, தினல் - உணவுகொள்ளும், அந்தம் - அழகு, திகழ் - விளங்கிய, தாரணியான் - பூமியையுடைய விஷ்ணுவிற்கும், அயன் - பிரமனுக்கும், காயர் - விண்ணவருக்கும், அம் - அழகிய, சகதி - பூமியாருக்கும், நல் - மிகுந்த, அம் - அழகிய, தந்தியனார்க்கும் - ஐராவதத்தையுடையஇந்திரனுக்கும், ஐ - சுவாமியே, சிலை - கருப்புவில்லேந்திய, அங்கசன் - மன்மதனுடைய, சரத்தின் - பாணத்தின், கதி - வேகத்தினது, இனல்-துன்பங்கள், அந்தம் - முடிவின், திறம் - உறுதியை, கண்டிலன் - காண்கவில்லை, என்ன - இனியென்ன, களி - நின்றி

ருபை, அரனே - தியாகனே. எ - று. பூமியை உணவாகக் கொள்ளும் விஷ்ணுவுக் கெனக்கூட்டுக.

(க-து.) மன்மதனதுதுன்பத்திற்கு முடிவில்லை நீஎப்போதகிருபைசெய்குவாய். (உக)

களிக்கநிதந் தண்ணினர் நிரைசெய்யகலியரந்த
களிக்கநிதந் தரனிங்கிசெந்நீர் தரக்கண்டகத்திற்
களிக்கநிதந்தயங்காதியகத்தனிக்கன்னியைத்தி
களிக்கநிதந்தடத்தண்சரநீக்கிடக்காலநன்றே.

(இ - ள்.) களிக்க - சந்தோஷிக்க, நிதம் - தினமும், தண்ணினர் - அடியார், நிரை - சூழும், செய்ய - செவ்விதாகிய, கலியர் - கலியநாயனர், அம் - அழகிய, தகளிக்கு - அகலினிடத்தில், அநிதம் - (தீபமில்லா) குற்றத்தினின்றும், தரல் - ஈதலை, நீங்கி - விட்டு, செந்நீர் - தன்னுதிரத்தை, தர - (அகலில்) விட, கண்டு - பார்த்து, அகத்தில் - உள்ளத்தில், களி - (அன்பின்) செருக்காகிய, கனிதம் - இனிமை, தயங்கு - விளங்கிய, ஆதியகத்தன் - திருவொற்றியூரன், இ - இந்த, கன்னியை - பெண்ணினிடத்து, திகள் - பிரகாசிக்கின்ற, இக்கன் - மதராஜன் (பிரயோகித்த), இதம் - இனிமையாக, தடம் - நீண்ட, தண் - தண்ணிய, சரம் - புட்பபாணத்தை, நீக்கிட - தடைசெய்ய, காலம் - காலமானது, நன்றே - நன்மையாகுமே. எ- று. [பாங்கிதலைவிப்பருவரலுரைத்தல்.] (உஉ)

காலத்தநகத்தரக்கனயன்றன்கடஞ்சிதைத்த
காலத்தநகத்தயாளடினடினர்கலங்கிடந்தக்
காலத்தநகத்தடநிரையாதியகன்றகைசெய்
காலத்தநகத்தநிற்றிடநண்ணிடென்காதனெஞ்சே.

(இ - ள்.) கால் - பாதத்தினுலும், அத்தம் - கையின், (நகத்தினுலும்), அரக்கன்-இராவணனதும், அயத்தன் - பிரமனதும், கடம் - அகந்தையை, சிதைத்த-அழித்த, கால்-எமன்போன்றவன், அத்த - அத்தன், நகு - விளங்கிய, அ - அந்த (கிருபையாகிய), தயாளர் - தன்மையுடைய, அடியர் - அன்பர்

நன், கலக்கிடு - நலிந்திடும், அந்தக்காலத்து - அந்தக்காலத்திலே, அனகம் - களங்கமற்ற, தடநிரை - வாவிகள்நிறைந்த, ஆதியகன் - திருவொற்றியூரன், தகைசெய் - தகைமைசெயும் (ஆகையால்), கால்-அவ்விடத்தின், அ - அந்த, தன்கு - உள்ளக்களிப்பின், அத்நம் - அருநெறியில், நிற்றிடல் - இருந்திடல், நண்ணிநீ - பொருந்திடுவாயாக, என் - எனது, காதல்-ஆசையாகிய, நெஞ்சே-மனதே. எ - று. [பாதத்தின் உகிரினால் இராவணனையும், கையின் உகிரினால் பிரமனையும் அழித்த வெனக்கூட்டுக. நான்காமடி யெதுகையில் அ சாரியை.

(க - ரு.) அன்பர்கள் நலிகின்றகாலத்தில் கிருபை செய்யுமிடம் திருவொற்றியூராகலின் அப்பதியிலேயே என்மனமே வாழ்வாயாக. (௨௩)

காதகநாகநகையதண்ணாதியகத்தரயான்
காதகனாகநண்ணாதெழிறண்ணலங்காட்டியிடர்
காதகநாகநண்ணித்தினநின்கழல்கழறக்
காதகனாகநகச்சிலைக்கையகலைச்சிரனே.

(இ - ள்.) காது-செவியின், அகம்-இடத்தில், நாகம்-பாம்பை, நகைய-குண்டலமாகத்தரித்த, தண்- குளிர்ந்த, ஆதியகத்து-திருவொற்றியூரின், அர-தியாகப்பெருமானே, யான்-நான், காதகனாக - பாவியாக, நண்ணாது - பொருந்தாமல், எழில்-அழகிய, தண்-தண்ணிய, நலம்-நன்மையை, காட்டி - தெரிவித்து, இடர்-துன்பங்களை, காது-கோபித்து, அகம் - உள்ளமும், நா-நாவும், நனம்-மேன்மையை, நண்ணி-பொருந்தி, தினம்-நாள்தோறும், நின் - உனது, கழல் - திருவடியை, கழற - துதிக்க, கா-காப்பாய், தகன்-அக்கினிபோன்ற, ஆக - தேகனே, நகம் - பொன்மலையை, சிலை-வில்லாக (ஏந்திய), கைய - கரனே, கலை-சந்திரன்(விளங்கிய), சிரனே - சிரசினனே. எ - று. தியாகப்பெருமானே காப்பாயெனக் கூட்டி முடிக்க. (௨௪)

கலைத்தலையாகநன்னாகதண்ணாதியகாகரிசி
கலைத்தலையாகநண்ணித்திரிநாயேன்கலக்கறனே.
கலைத்தலையாகனச்சிரினைத்தந்தாள்கரச்சிலையா
கலைத்தலையாகனநாககடிகளின்காடகனே.

(இ - ள்.) கலை-சந்திரன் விளங்கிய, தலை - வேணியும், ஆகம்-மார்பில், நன்-நல்ல,நாக-சர்ப்பாபரணமுமுடைய,தண்-தண்ணிய, ஆதியகா-திருவொற்றியூரனே, கரிசு - குற்றமாகிய, இகலை-விரோதத்தை, தலையாக - முதன்மையாக, நண்ணி-பொருந்தி, திரி-உழலும், நாயேன்-எளியேன், கலங்கல்-வருந்தும், தனை-அதனை, கலைத்தல்-ஓட்டுதற்கு, ஐயா - ஐயனே, கனம் - மேன்மைபெற்ற, சிரினை - சிறப்பை, தந்தாள் - கொடுத்தருள்வாய், கரம்-கையில், சிலையா-கிரியை வில்லாக உடையவனே, கலை-சங்கத்திற்கு, தலை - தலைவனே, ஆகனம் - செவியில், நாக-பாம்பையுடையவனே, கடிகளின் - பேய்களிருக்கின்ற, காடகனே-சுடலையிலிருப்பவனே. எ-று. ஒற்றியூரனே, ஐயனே,தலைவனே, இருப்பவனே யெனவடுக்கி அருள்வாயெனமுடிக்க. ()

காடகநட்டந்தரத்த தண்ணுதியகத்த தனக்
காடகநட்டந்தரச்சரத்தாற்றிகழ்க்கன்னியன
காடகநட்டந்தரந்தானினியென்கலங்கியந்த
காடகநட்டந்தாஞ்சிதச்சந்தைதக்கடத்தினளே.

(இ - ள்.) காடகம் - சுடலையிடத்து, நட்டம் - நடித்த, தரத்த - திறத்தனே, தண்-குளிர்ச்சிபொருந்திய, ஆதியகத்த - திருவொற்றியூரனே, தனம் - முலையின், காடகம் - சிலையாகிய (கச்சு), நட்டக்தர-பிதுங்கிவிட, சரத்தால்-மதன்பாணத்தால், கதிழ்-விளங்கிய, கன்னி - பெண்ணாகிய, அனகாள் - பரிசுத்தமுடையாள், தரு-தருக்த, அனள்-அன்னம்போன்றவள், தந்தரந்தான் - தனதுஉபாயத்தால், இனி-இனிமேல், ஏனு-யாதுகாரணம், கலங்கி - அவள்பிரமித்து, அந்த-அந்த (நினது), காடு-இடமாகிய, அகம் - உள்ளத்தில், நட்டு - ஊன்ற, அந்தம்-அழகிய, ரஞ்சிதம் - பிரியமுடன், சந்தை - தாதை, கடத்தினள் - விடுத்தாள். எ - று. விடுத்தாள் யாது காரணமெனச்சேர்க்க. (பாங்கன் தலைவனை வினாதல்.) (உசு)

கடத்தினகத்ததீளாகத்தகரக்கிதாணி
கடத்தினகத்ததனையனவிந்திரன்காணவிலான்
கடத்தினகத்ததண்ணுதியகத்தனோர்காத்தளித்தாள்
கடத்தினகத்தநலார்நிரையந்தகரத்தானே.

(இ - ள்.) கடத்தின் - மும்மதங்களையுடைய, நகத்து - யானையின், அதள் - தோல்போர்த்திய, ஆகத்த - தேகத்தனே, கரகரி - விண்டுவும், தரணி - பூலோகத்தாரும், கள் - தேனை, நத்து - நதம்புகின்ற, இன்-இனியதாமரையினது, அகந்தன் - இடத்தில்பொருந்திய, ஐயன் - பிரமனும், நல் - நல்ல, இந்திரன் - தேவேந்திரனும், காணவில் - காணற்கரிய, ஆன் - இடபத்தை, நடத்தின் - நடத்தின, கத்த - கர்த்தனே, தண் - தண்ணிய, ஆதியகத்த - திருவொற்றியூரனே, நேர் - நேரில்வந்து, காத்தளித்தாள்-காத்தருளுவாய், கடத்தில் - கும்பத்தில், நகு - பிறந்த, அ - அந்த, நதலார் - நிலைபெற்ற குப்பமுனி, திறை- பொருந்தி (துதிக்கும்), அத்த - கடவுளே, கரம் - கையில், தரனே - பிர்மகபாலமேந்தியவனே. எ - று. நேரில்வந்து காப்பாற்றி யருள்வாயென்றதை யிறுதியிற் கூறிக்கொள்க. (உஎ)

காத்தரத்தையரெழிலாதியகரக்கஞ்சிநன்ன
காத்தரத்தையராகத்தர்கடத்தின்கரியதளா
கரத்தரத்தையலளங்கசனலிகாதலைநி
காத்தரத்தையடிநீக்கத்தரந்தான்கசடிலையே.

(இ - ள்.) கரம் - கையில், தரத்து - மலைவில்லேந்திய, ஐயர் - கடவுளர், எழில்-பிரகாசிக்கின்ற, ஆதியகர் - திருவொற்றியூரர், அம் - அழகிய, கஞ்சி-காஞ்சியென்னும், நல்-நல்ல, நகரத்தர் - ஊரையுடையவர், அந்து - அரைநாண்கயருக, ஐ - அழகிய, அராகத்தர் - பாம்பைத்தரித்தவர், கடத்தின் - மும்மதங்களையுடைய, கரி - வேழத்தின், அதள் - தோல்போர்த்த, ஆகர் - தேகத்தையுடைய, அந்தர் - கடவுளின்மேல், அ- அந்த, தையலள் - பெண்ணனவள், அங்கசனல் - மன்மதனுல், நலி - வருத்துகின்ற, காதலை - ஆசையை, நிகர் - ஒப்பாகிய, அத்தம் - பொன்போன்ற, ரத்தை - சிவந்த, அடி-பாதங்களை, நீக்க - பிரிய, தரந்தான் - மேன்மையாகும், கசடு-குற்றங்கள், இலையே - செய்திலையே. எ - று. [தலைவனிடப் பாங்கி வருந்தல்.] (உஅ)

கசநண்ணியதடக்காநிரையாதியகத்தநிசி
கசநண்ணியதட்டிநடத்தியெதிர்கனஞ்செறியங்
கசநண்ணியதந்திகழ்சரநீங்கக்கனனிறத்தே
கசநண்ணியதரியைக்காநெடியகரிசறற்கே.

(இ - ள்.) கசம் - வாவிகள், நண்ணிய - பொருந்திய-தடம்-விசாலமான, கா - சோலைகள், நிரை - சூழ்ந்த, ஆதியகத்த - ஒற்றியூரனே, கசம் - வேழமான, நள் - நடுவாகிய, நிசி - இராப்பொழுதை, நி - உறுதியுடனே, அதட்டி - உறுக்கி, நடத்தி - செலுத்தி, கனம் - மேன்மை, செறி - பொருந்திய, அங்கசன் - மன்மதன், அண்ணி - நெருங்கி, அதம்-விருத்தம்-திகழ் - விளங்கிய, சரம் - புட்பபாணங்கள், நீங்க - நீங்கவும், கனல் - அக்கினிபோன்ற, நிறம் - வண்ணத்தைவாய்ந்த, தேக-தேகனே, சம் - சுகத்தை, நண்ணி- இருத்தி, அதரியை-சிவந்த அதரத்தையுடைய இப்பெண்ணை, கா - காப்பாய், நெடிய - நீண்ட, கரிசு - குற்றங்கள், அறற்கே - ஒழிவதற்கே. எ - று.

(க - ரை.) புட்பபாணங்கணீங்கவும் அதனால் தலைவிவாய்ந்த குற்றமொழியவும் காப்பாயென்க. [பாங்கிவேண்டல்.]

கரியதளத்தரெழிலாதியினகக்கத்தரயன்
கரியதளத்தநிறத்தினன்றென்னனற்கன்னிதண்சங்
கரியதளத்தரகநீயளியின்கனந்தனைநி
கரியதளத்தண்ணடியர்நிரைகழல்காணனன்றே.

(இ - ள்.) கரி - யானையின், அதளத்தர்-தோலையுடையவரும், எழில் - அழகிய, ஆதியினகம் - ஒற்றியூரனுமாகிய, கத்தர் - கடவுள், அயன் - பிரமனும், கரிய - கறுத்த, தளத்த-பருத்தவடிவின், நிறத்தினன் - வண்ணத்தையுடைய, விஷ்ணுவும் (புகழும்), தென்னன் - பாண்டியன்தன், கன்னி-குமரியாகிய, தண் - குளிர்ந்த, சங்கரியது - பார்வதியின், அள் - நெருங்கிய, அத்தர் - பாகத்தர், அகநீ - மனதேநீ, அளியின் - இரு
யான, கனந்தனை - மேன்மைக்கு, நிகரிய - ஒப்பாகிய, தளம் - கூட்டமான, தண் - தண்ணிய, அடியர் - அன்பர், நிரை-சூழு

கின்ற, கழல் - (தியாகர்) பாதங்களை, காணல் - காணுதல், நன்றே - நலமே. எ - று. (கூ௦)

காணக்கனந்தங்திகழடியார்நினைகத்தரெழில்
காணக்கனந்தங்திதநிறத்தாகர்கழலைநெஞ்சே
காணக்கனந்தங்தியையாணரகரிகாழ்கலையன்
காணக்கனந்தங்திரரடையாதியகத்தடைந்தே.

(இ - ள்.) காண - பார்க்க, கனந்தம் - மேன்மையை, திகழ் - விளங்கிய, அடியார் - பக்தர்கள், நினை - துதிக்கும், கத்தர் - கடவுள், எழில்காண் - அழகாரும், அக்கு - எலும்புமாலையணிந்த, அனந்தம் - அனேகமாகத்திரண்ட, திதம் - அக்கினியின், நிறத்து - வண்ணத்தையுடைய, ஆகர் - தேகத்தையுடையவர், கழலை - அவர்பாதத்தை, நெஞ்சே - மனமே, காணு - வணங்கு, அக்கம் - அருகில்வந்து, கழ் - நல்ல, தந்தியை - கஜேந்திரனை, ஆள் - ஆண்ட, நரகரி - விஷ்ணுவும், காழ் - வயிரம்பொருந்திய, கலைய - வேதத்தையுடைய பிரமனும், காணு - சந்தித்து, அ - அந்த, கனம் - கூட்டமாகிய, தந்திரர் - கந்திருவர்களும், அடை - சேர்ந்துதொழும், ஆதியகத்து - ஒற்றியூரில், அடைந்து - சேர்ந்து. எ - று. வணங்கு என்பதனைக் கடையிற்கூட்டுக. (கூக)

கத்தடைக்கத்தனனிச்சயக்கத்தன்கசடறன
கத்தடைக்கத்தனண்ணுதியன்கிள்ளைகாசிக்கனந
கத்தடைக்கத்தனத்தேகன்னறங்கசன்கண்டவின
கத்தடைக்கத்தனந்தக்ககதிரளிகாட்டனன்றே.

(இ - ள்.) கத்து - பொய்யை, அடை - பொருந்திய, கத்தன் - பிரமனும், நல் - நன்மையான, நிச்சயம் - உண்மை பொருந்திய, கத்தன் - விஷ்ணுவும் (தங்களுடைய), கசடு - குற்றங்களை, அற - நீங்கும்படியாய், அனகம் - அகன்ற, தடைக்கு - தடைசெய்வதற்காக (மலையாயுதித்த), அத்தன் - கடவுள், நண்ணு - விளங்கிய, ஆதியன் - ஒற்றியூரன், கிள்ளை - கிளியின், நாசி - மூக்கையொத்த, கனம் - பருத்த, நகத்தன் - விரலினன் (பேரில்), தைக்க - (அம்பு)

புதைக்க, தனத்தே-கொங்கையிடத்தே, கனன்று - கோபித்து (பிரயோகித்த), அங்கசன்-மதராசனை, கண்டு-பார்த்து (அவனை நிவந்த), அலி-இருளை, அக-நீங்கும்படியாக, தடு-தடுத்து, ஐக்கு-அழகையும், தனம்-பொன்னிறத்தையும், தக்க-தகுதியாக, கதிர்-விளங்கிய, அளி-கிருபைவீட்டை, காட்டல்-காண்பித்தல், நன்று-நன்மையாகும். எ - று. [பாங்கியிரங்கல்.] (௬௨)

காட்டந்தலையத்தனனாதியகன்றகையசகி
காட்டந்தலையத்தனகச்சலைந்தாகனலிதரல்
காட்டந்தலையத்தனதன்றனேனன்கன்றிரியக்கே
காட்டந்தலையந்தனகசந்தாதறகளித்தனன்றே.

(இ - ள்.) காட்டம் - விரகேச்திய, தலையத்தனன் - சிரசினன், நல் - நல்ல, ஆதியகன் - ஒற்றியூரன், தகைய-சற்குணமுள்ள, சகிகாள் - தோழிகளே, தந்து - நூலைப்போலுமிடை, அலைய - தவள, தனக்கச்சு - முலையினிரவிக்கையானது, அலைந்து - பிறங்கி, ஆகம் - தேகம், நலிதரல்-நலிவுதரலை, காட்டு - தெரிவிக்கும், அந்தலை - அந்தமுதன்மையாகிய (செயலை), அம்-அழகிய, தனத்தன் - குபேரனுக்கு, நேயன் - நண்பனாகிய, நக்கன்-தற்பரன், திரி-மூன்றாகிய, அக்காள்-கண்களையுடையபார்வதி, தந்தலை - தன்னிடத்தின், அத்தன் - பாகத்தன் (ஆகியவதி யாகேசன்), நக - விளங்க (தெரிந்துகொள்ள), சந்து - தூது, ஆதல் - (நீங்கள்) ஆகுதற்கு, களித்தல் - மகிழ்தல், நன்றே-நன்மையே. எ-று. [செவிலித்தாய் பாங்கியருக்குப்பகரல்.] (௬௩)

களித்தனளக்கலங்கற்றனைச்சார்ந்தெழில்காரிகையர்
களித்தனளக்கதையற்றனளாகிக்கங்காளகத்தர்
களித்தனளக்கரியகையாநியல்கண்கரிசை
களித்தனளக்கனஞ்சாத்தியிங்கேத்திடக்காதனன்றே.

(இ - ள்.) களித்தனள் - சந்தோஷித்தாள், அங்கு-எலும்பாகிய, அலங்கற்றனை - மாலையை, சார்ந்து - அவ்விடஞ்சேர்ந்து, எழில் - அழகிய, காரிகையர் - தோழிகள், களித்தனள் - இருட்டுத்தன்மையில், அக்கதை-அக்காரியத்தினை, அற்றனளாகி-

பிரிந்தவளாகி, கங்காளகத்தர் - முழுவெலும்பணிந்த தேவர், களி - பாங்கிகளின், தன் - தன்னை, அளக்கரிய - அளப்பதற்கரிய, தகை - தன்மையாகிய, ஆதியன் - ஒற்றியன், கண்-அவரிடத்தில், கரிசை - (தலைவியின்)குற்றத்தை, களித்து-ஒழித்து, அனள்-அன்னவள், அக்கனம்-அழகிய மேன்மையாகிய (தன்மையை), சாத்தி-(அவர்பால்)சொல்லி, இங்கு - இவ்விடத்தில், ஈந்திட-(அம்மாலையினை)கொடுத்திட, காதல்-(கொண்ட) அபேட்சையானது, நன்று - நல்லது. எ - று.

(க - து.) தோழிகள் திருட்டுத்தன்மையில் மாலையைச் சேர்க்கச் சந்தோஷித்த தலைவியானவள் அதனைப் பிரிந்தமையால் மறுபடியும் பாங்கியர் ஒற்றியூரர் பாற்சென்று பெறுதனன்று. (௩௪)

காதக்கனையத்தகங்கணநாதகங்காளநனக்
காதக்கனையத்தழலியாகத்தந்தகாதரையைக்
காதக்கனையத்தநின்கதியாக்தண்கழனிழறு
காதக்கனையத்தனிசிராதியகாநலனே.

(இ - ள்.) காதக்கனை - கட்செவியானை, அத்தம் - கைகளுக்கு, கங்கணநாத - கடகமாகியகடவுளே, கங்காள - முழுவெலும்பா, நல் - நல்ல, நக்கா - சிவனே, தக்கன் - தட்சகன், நைய-வருந்த, தழலியாகத்து - அக்கினியாகத்திற்கு, அந்தகா - எமனே, தரையை - பூமியை, கா - காத்தற்கு, தக்கு-தகுந்த, அனை - உமையின், அத்த - பாகத்தனே, நின் - உனது, கதியாம் - மோட்சமாகிய, தண் - குளிர்ந்த, கழல் - பாதங்களின், நிழல் - நிழலை, தா - தருவாய், காதம் - சோலையின், கம் - சலமும், கையத்த - மிருதுவாகிய, கனி - பழங்கள், சீர் - சிறந்த, ஆதியகா - ஒற்றியூரா, நலனே - நன்மையானவனே. எ - று. தருவாய் என்பதனை யீற்றில் கூட்டுக. (௩௫)

கானலிநட்டனிலக்கடிநேர்ந்தகலினியநீள்
கானலிநட்டனிகழாதிநகர்கீரனந்தங்
கானலிநட்டனிரைந்திடலென்னகடன்றகைநீ
கானலிநட்டனிதரைநிதிதாகத்தறற்கே.

(இ - ள்,) கால் - பாதங்கள், நவி - துவள, நள்தனில் இருளில், அக்கடி - அந்தப்பேய்கள், நேர்ந்து - தன்னைச்சூழ, அகல் - விசாலமாகிய, இனிய - இனிதாகிய, நீள் - நீண்ட, கானவில் - சுடலையில், நட்டம் - நடனத்தை, நிகழ் - பயிலுகின்ற, ஆதிநகர் - ஒற்றியூரில்வாழும், கானர்தம்-பலஇரும்பும், கான் - உதவியற்றகாடும், அலி - பேடியும், நட்டம் - இக்நஷ்டத்தை, நிரைந்திடல்-பூரணமாகக்கிடைத்திடல், என்னகடன் - என்னகடனாகும், தகை - சாந்தகுணமுள்ள, நீ - நீர், கான் - ஞானத்தைவாய்ந்த, நல் - நல்ல, இனள் - மாதரும்; தனி - ஒப்பற்ற, தரை - நிலங்களும், நிதி - திரவியமும், தாதக்தருளுவாய், கத்து - துன்பங்கள், அறற்கே - நீங்குதற்கே. எ - று. [ஒற்றியூரில்வாழும் நீர் துன்பநீங்கவருளுவாயென்று கூட்டுக.]

(க - து.) உபயோகமற்ற இரும்பினையும் யாதும் விளையாதகாட்டினையும், சுகமில்லாத அலியையும் அடைந்து துன்பமுறாதவகைமுறையே பொன்னையும் விளைநிலத்தையும் நல்ல மாதினையும்தருவாய் என்றது. (௩௬)

கத்தநக்காகந்தனைத்தந்தரக்கரைகாயகல
கத்தநக்கரகந்தனையத்தேனலர்கட்கனெஞ்ச
கத்தநக்காகந்தனையனற்றாயாய்க்கலந்திடன
கத்தநக்காகந்தனைசிதலறுதியகாகத்தனே.

(இ - ள்.) கத்த - கத்தனே, நக்கா - சிவனே, கந்தனை - முருகனை, தந்து - பெற்று, அரக்கரை - அசுரரை, காய் - கோபித்த, அகல் - விசாலமாகிய, அகம் - இடத்தைவாய்ந்த, தனம் - திரவியம்கொடுக்கும், கா - சோலையின், கந்தம் - வாசனையானது, நையத்த - மிகுதியான, தேன் - தேன்பொருந்திய, அலர்கள் - புட்பங்கள்நிரைந்த, கம் - சலத்தில், நெஞ்சகத்து - மனதில், அனம் - அன்னங்களும், காகம் - காக்கைகளும், தனையன் - புத்திரனைப்போலவும், நல் - நல்ல, தாயாய்-அன்னைப்போலவும், கலந்திடு - உறவாடி, அனகத்தம்-களங்கமறுதலாகி, நக்கு - விளங்கிய, ஆகந்தம் - (காட்சியான)

உருப்புகள், கைசிதல் அறு - நசிந்துவிடுவேதுநீங்கிய, ஆதிய - ஒற்றியூரா, கா - காப்பாய், கந்தனே - கடவுளே. எ - று. [மனதில்அசுரரைக்கோபித்த முருகனைப்பெற்றுஎன்றும், கடவுளே காப்பாயென்றுமுடிக்க.] (௩எ)

காகந்தனைக்களியார்ந்தினிதடையக்காத்திடன
காகந்தனைக்களியில்லானைக்காக்கச்செய்காரினத்தால்
காகந்தனைக்களிசேர்தகையாதியகாகனநக்
காகந்தனைக்களிதக்கனாட்டினகஞ்செய்கண்டிதனே.

(இ - ள்.) காகந்தனை - காக்கையை, களி - (கற்) களியில், ஆர்ந்து - பொருந்தி, இனிது - இனிமையை, அடைய - சேர, காத்திடு - இரக்ஷித்திடும், அனகா - பரிசுத்தனே, கந்தனை - முருகனாலே, களியில்லானை - பொய்யாமொழிப்புலவனை, காக்கச்செய்-காக்கும்படிசெய்தாய், காரினத்தால் - மேகங்களினால், கா - சோலையின், கந்தம் - மணங்கள், நைந்து - நைந்து, களி - கழிகளில், சேர் - பொருந்திய, தகை - தன்மை வாய்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, கனம் - மேன்மையாகிய, நக்கா - சங்கரா, கந்தனை - சிரசினை, களி - நீங்கிய, தக்கன்-தட்சகனுக்கு, ஆட்டினகம் - ஆட்டின்சிரசினை, செய் - கொடுத்த, கண்டிதனே - நிச்சயனே. எ- று. (௩அ)

கண்டிதந்தந்தநலத்தினியலினைக்காசினியிற்
கண்டிதந்தந்தநகத்தன்றலையில்கலந்திடச்சி
கண்டிதந்தந்தனத்தந்தியாராதியகாச்சிலையாங்
கண்டிதந்தந்தநந்தண்ணெச்சிலெழிலிகாரிகைக்கே.

(இ - ள்.) கண்டிதம் - நிச்சயமாக, தந்தம் - தங்கள்தங்கள், நலத்தின் - நன்மையின், இயலினை - தன்மையின்படி, காசினியில் - பூமியில், கண்டு - (பரிபாகம்) பார்த்து, இதம் - இனிது, ஈந்த - கொடுத்த (நன்மை), நக-விளங்கியளும். தன் - (இடயாகிய) தனது, தலையில் - சிரசில், கலந்திட - பொருந்திநடிக்க, சிகண்டி - மயில், தந்தம் - கோடுகளை, தனம் - சொந்தப்பொருளாகவுடைய, தந்தி - யானைகள், ஆர் - நிறைந்த,

ஆதியகா - ஒற்றியூரா, சிலையாம் - மலையாகும், கண்டு-கற்கண்டாகும், இது - இதுவே, அந்த - அழகு (ஆகும்), தனம்-முலைகளும், தண் - குளிர்ந்த, எச்சில் - உச்சிட்டமும், எழிலி-அழகைவாய்ந்த, காரிகைக்கே - இப்பெண்ணிற்கே. எ - று.

(க - து.) மலையாகு முலைகளும், கற்கண்டாகு முச்சிட்டமும் பெண்ணிற்கு இதுவே அழகு என்றும், மயில்பொருந்தி நடிக்கவென்றுமாற்றுக (தலைவியைப்புகழ்தல்.) (௩௯)

காரிகையாரியங்கேரினத்தின்கனங்காழ்சிலைச்சிங்
காரிகையாரியராயனனந்தநற்கண்ணினனு
காரிகையாரியன்றடையாதியநக்கார்சிரசிற்
காரிகையாரியலவந்தலறக்கசிந்தனனே.

(இ - ள். காரிகையார் - பெண்களின், இயங்கு - பொருந்திய, ஏர் - அழகிய, இனத்தின் - கூட்டத்தலைமைக்கு, கனம் - மேன்மையுற்ற, காழ் - வயிரஞ்சேர்ந்த, சிலை - இமயமலைதந்த, சிங்காரி - அழகியபார்வதியை, கை - தன்னிடத்திலுடைய, ஆரியர் - அழகர், ஆயன் - பிரமனும், அனந்தம், அனேகமாகிய, நல் - நல்ல, கண்ணினன் - கண்களையுடைய இந்திரனும், நாகாரி - கெருடனை, கையார் - வெறுக்காதவாகனமாகவுடையவிஷ்ணுவும், இயன்று - கூடி, அடை - சேரும், ஆதியகம் - ஒற்றியூரின், நக்கார் - சங்கரர், சிரசில் - தலையில், கார் - கங்கையைத்தரிக்கும், இகையார் - தன்மையர், இயல் - என்னைச்சூழ்ந்த, அனந்தல் - வருத்தங்கள், அற - நீங்கும்பொருட்டு, கசிந்தனன் - உள்ளமுருகினன், எ - று. (௪0)

கசிந்தனங்காண்டங்கசந்தனளந்திங்கணதியைக
கசிந்தனங்காண்டலையன்சங்கரன்றன்கடியினைக்காண்
கசிந்தனங்காண்டகைசிரடைக்திட்டகரிநிறத்தா
கசிந்தனங்காண்டறண்ணுதியகனலங்கற்றகைக்கே.

(இ - ள்.) கசிந்து - உள்ளமுருகி, அனம் - சாதமும், காண்டம் - சலமும், கசந்தனள் - (பெண்) வெறுத்தாள், அம்-அழகிய, திங்கள் - சந்திரனையும், நதியை - கங்கையையும்,

நகசு - பிரகாசிக்கச்செய்து, இந்தனம் - விறகு, காண் - தோன்றுகின்ற, தலையன் - சிரசினன், சங்கரன்-கலமீபவன், தன - தமது, கடியினை - மணக்கோலத்தை, காண்க - பார்க்க, சிந்தன் - குறுமுனிவன், அங்கு - அவ்விடத்து, ஆண்டகை-ஆண் தன்மையாகிய, சீர் - சிறப்பை, அடைந்திட்ட - பொருந்திய, கரி-கரிய, நிறத்தாக - வண்ணத்தேகத்தைவாய்ந்த, சிந்து-சமுத்திரத்தில், அனம் - அம்சங்கள், காண்டல் - விளங்குகின்ற, தண் - தண்ணிய, ஆகியகன் - ஒற்றியூரனது, அலங்கல்-மாலையின், தகைக்கே - தகைமைக்கே, எ - று. ஒற்றியூரன் மாலையின் தகைமைக்கே உள்ளமுருகிச் சாநமுஞ் சலமும் வெறுத்தானென்றும், குறுமுனிவன் ஆண்தன்மையாகிய சிறப்பைப்பொருந்திய தமது மணக்கோலத்தைப்பார்க்கத் தோன்றுகின்ற சிரசினன் எனமுடிக்க. (மாலைக்கிரக்கல்.) (சுக)

கற்றனத்தாரணிதேசிகநங்கையின் காழ்கழிய
கற்றனந்தாரணியக்கழனித்தாங்கலடரிளங்
கற்றனத்தாரணிதங்கவில்லாதியகாகலிய
கற்றனந்தாரணிக்கங்கணைநின்கட்கடையளியே.

(இ - ள்.) கற்றனம் - படித்தேம், தாரணி - பூமிக்கும் தேசிகம்-பொன்னுக்கும், நங்கை - மாதருக்கும், இன் - (அந்த) இன்பமாகிய, காழ் - வயிரத்தை, கழி - ஒழிப்பாய், அகல் - அகன்ற, கந்து - சங்கினங்களும், ஆர் - ஆத்திமரங்களும், அணிய - நெருங்கிய, கழனி - வயல்களும், தாங்கல் - கழிகளும், அடர்-நெருங்கி, இளம் - இளமைதங்கிய, கற்று - பசுங்கன்றுகளும், அனம் - அன்னங்களும், தார் -ஒழுங்கு, அணி - நிறைந்த, தக்க - தகுதியாகிய, நல் - நல்ல, ஆதியகா - ஒற்றியூரா, கலி - (எனது) தரித்திரத்தை, அகற்று - நீக்குவாய், அனங்கார் - ஆதிசேடனே, அணி - ஆபரணமாகிய, கங்கண - கைக்கடகனே, நின்கட்கடை - உனது கிருபைவிழியை, அளி-அருள்வாய். எ - று. பூமிக்கும் பொன்னுக்கும் மாதருக்குமே படித்தேனென்றும், ஒற்றியூரா ஒழிப்பாய் நீக்குவாய் அருள்வாயெனமுடிக்க. இரண்டாமடியெதுகையில். நம் அசை.

கடையனகத்தனணங்தையனியான்கடலதனைக்
கடையனகத்தனுற்கரியநஞ்சங்காணநன்றெநங்
கடையனகந்தன்றினக்களித்தான்சாகாரிகைதலைக்
கடையகைந்தனலந்திகழாதியகன்றகையே.

(இ - ள்.) கடையன் - நாயிலுங்கடையேன், அகத்தன் - செருக்குடையவன், அணங்தயன் - வருத்தத்தன், இயான் - நான், கடலதனை - சமுத்திரத்தை, கடைய நகத்ததனுல் - மலையால் கடைந்திட, கரிய - கறுத்த, நஞ்சம் - விடமானது காண - உண்டாக, நன்குளங்கள் - எமதுகல்ல, தையல் - பார்வதியாள், நகு - விளங்கிய, அத்தன் - பாகத்தன், தின - புசிக்க (என்வலி), களித்தான் - மகிழ்ந்தவன், சாகரிகை - பரவையென்பவரின், தலைக்கடை - தலைவாயிற்படியில்சஞ்சரிக்கின்ற, அனகத்தன் - களங்கமற்றவன், நலம் - நன்மைகள், திகழ் - விளங்கிய, ஆதியகன் - ஒற்றியூரன், நகையே - (அவனது)கிருபையே (எனக்குண்டாருக) எ - று. இயானென்பதனைக்கடையன் என்னுஞ்சொல்லினுக்குமுன்வைக்க. (சரு)

கன்றநஞ்சந்தனிற்கையணிக்கங்கணங்கள்கழன்ற
கன்றநஞ்சந்தனியாயந்தனையறக்காக்களிலாக்
கன்றநஞ்சந்தனிரைந்திடாதியகத்தனன
கன்றநஞ்சந்தனித்தாரணியச்செயகளங்கறற்கே.

(இ-ள்.) கன் நஞ்சந்தனில்-மனதில் நலிய, கை-(எனது) கரங்களின், அணி-ஆபரணமாகிய, கங்கணங்கள் - கடகங்கள், கழன்று-விட்டு நீங்குதலினுல், அகன்ற-விசாலித்த, நம்-நல்ல, சந்து-அதின்மூலமாக, அனியாயந்தனை-கெடுதி வார்த்தையை (பிறர் பேசாவண்ணம்), அற-நீங்க, காக்களில்-சோலைகளில், ஆக்கன்று-பசுக்கன்றுகளும், அனம் - அன்னங்களும், சந்தம்-அழகாக, நிரைந்து-சூழ்ந்து, அடர்-நெருங்கிய, ஆதியகத்தன் - திருவொற்றியூரினன் (ஆகிய), அனகன்-களங்கமில்லானிடஞ் (சென்று), நனம்-எனதுமுலைகள், தனிசம் - ஒப்பற்ற இனிமையாகிய, தார்-(அவனது)மாலையை, அணியச்செய்-(நான்)தரிக்கச்

செய்வாய்,களங்கு-(எனது) குற்றங்கள், அறற்கே-நீங்குதற்கே. எ - று. [தலைவிபாங்கிக்குரைப்பகரல்.] (சச)

களங்கரநஞ்சந்திரியயிலான்றிண்கரிசனந்தைக்
களங்கரநஞ்சந்திரியகத்தாரையகன்றனிறங்
களங்கரநஞ்சந்திரியவறுதியகத்தனன்றி
களங்கரநஞ்சந்திரியக்கழறலிக்காலநன்றே.

(இ - ள்.) களம் - கண்டத்திலும், கரம்-கையிலும், நஞ்சம் - (முறையே) விடமும், திரியயிலான் - முத்தலைச்சூலமும் உடையவன், திண் - வலிய, கரிசு - குற்றத்தையும், அனந்தை துன்பத்தையும், களங்கர் - கரவுதன்மையுமுடைய, நஞ்சம் - மனத்தினராய், திரி - உலாவுகின்ற, அகத்தாரை-ஆங்காரிகளை, அகன்று - நீங்கி (இருப்பதும்), அல் - இருண்ட, நிறங்கள் - நிறங்களைவாய்ந்த, அங்கர் - மேனியாகிய விண்டேமுதலானோர் (வாழ்வதும்), அகம் - அன்னங்கள், சம் - இனிமையுடன், திரியல் - வேறுபட்டு, அறு - நீங்குதலற்ற, ஆதியகத்தன் - திருவொற்றியூர் என்னுந்தலத்தன், நல் - நன்மையுடன், திகழ் - விளங்கிய, அங்கு - அவ்விடத்து, அரன் - பரமன்பால், அம்- அழகிய, சந்து - தூது (அனுப்பியதை), இரிய - நீங்க, கழல் - சொல்லுவாய், இக்காலம் - இப்பொழுது, நன்றே - நமக்கனுகூலமாம். எ - று. (தூதகற்றல்) இரண்டாமடி யெதுகையில் அ-சாரியை. (சரு)

காலனங்கந்தனைத்தாணலியச்செயக்காழினந்தக்
காலனங்கந்தனையத்தகதியளிகாட்டனந்தைக்
காலனங்கந்தனைத்தந்தியாககயத்தினிற்செங்
காலனங்கந்தனைக்கஞ்சநணுதியகானலனே.

(இ - ள். காலன் - யமனானவன், அங்கந்தனை - சரீரத்தை, கலிய - வருந்தும்படி,செயக்காழின் - உறுதியாகப்புரிகின்ற, அந்தக்கால் - அப்பொழுது, அனங்கம்தம் - அனகமாகியபரிசுத்தமென்னும்நமது, நயத்த - அருமையான, கதியளி - மோட்சமென்னும்கிருபையை, காட்டு - காண்பிப்பாய், அனந்

தை - தேவர்தம்வருத்தத்தை, கால - தெரிவிக்க, நம் - நமது கந்தனை - முருகனை, தந்த - பெற்ற, தியாக - தியாகனே, கயத்தினில் - தடாகத்தில், செங்கால் - சிவந்தகாலையுடைய, அனம் - அன்னங்களால், கந்தம் - பரிமளமானது, நை - நைந் திடும்படியான, கஞ்சம் - தாமரைகள், நண்ணு - பொருந்திய ஆதியகா - ஒற்றியூரா, நலனே - நன்மையானவனே. எ - று. முதலடியெதுகையில் தான்-அசை. (சசு)

கானலந்தந்தனகக்கதிதந்ததகளியனழற்
கானலந்தந்தனகத்திற்றிரிந்தெனங்கந்தனிலக்
கானலந்தந்தனங்காண்கலையனயன்காணிலர்நக்
கானலந்தந்தனலத்திற்செலாதியகன்னலனே.

(இ - ள்.) கால் - பாதங்களின், நலம் - நன்மையை; தந்து - கொடுத்து, அனகம்-சுத்தமாகிய, கதி - மோட்சத்தை, தந்த - அளித்த, களியன் - ஆனந்தத்தையுடையவன், அழல் - அக்கினிவீசும், கானல் - காட்டிலும், அந்தந்த - அங்கங்குண்டாகிய, நகத்தில் - மலைகளிலும், திரிந்தென் - உலாவியென்னபிரயோசனம், அங்கந்தனில் - உருப்புகளில், அக்கான் - நேத்திரத்தையுடையஇந்திரனும், அல் - இருண்டமேனியாகிய, அந்தம் - அழகையும், தனம் - பொன்னிறம், காண - விளங்கிய, கலையன் - ஆடையையுடையவனாகிய விண்டுவும், அயன்-பிரமனும், காணிலர் - அறியக்கூடாதவராகிய, நக்கான் - பரமன், அலம் - கலப்பையாக, தந்தம்-யானைக்கொம்பினைக்கொண்டு, நலத்தில் - நன்மையுண்டாக, செல - (உழவர்) நடத்தும்படியான, ஆதியகன் - ஒற்றியூரன், நலன்-நன்மையானவன். எ-று.

கன்னலத்தன்னயன்சற்சனனளினக்கண்ணனந்த
கன்னலத்தன்னயனட்டதிசைகளக்கந்தனிலக்
கன்னலத்தன்னயத்திட்டதண்கன்னியன்கைத்தலத்திற்
கன்னலத்தன்னயனென்றடையாதியகனிழலெற்கே.

(இ - ள்.) கன்னல் - கருப்புவில்லையேந்திய, அத்தன் - கையையுடையமன்மதனும், அயன் - பிரமனும், சற்சனன் - நன்னெறியாரும், நளினக்கண்ணன் - தாமரைக்கண்ணனாகிய விஷ்ணுவும்), அந்தகன் - யமராஜனும், அலத்தன் - பலராம

னும், அயன் - ஐயனும், அட்டதிசைகள் - எண்டிசைக்குள்ளோரும், அங்கந்தனில் - சரீரத்தில், அக்கன்-கண்ணையுடைய இந்திரனும் இவர்களியாவரும்), அல்-இருளானது, அத்தம் - பாகத்தில், நயத்திட்ட - விருப்பங்கொண்டாற்போல, தண் - தண்ணிய (நிறத்தினையுடைய), கன்னியன் - பார்வதியான், கைத்தலத்தில் - கையினிடத்து, கன்னலத்தன் - அக்கினியான், ஐயன் - கடவுள், என்று - இவ்வாறு துதிக்கத்தகுந்த, அடை - (வளங்கள்) நெருங்கிய, ஆதியகன்-ஒற்றியூரன், நிழல் - (அவர்)பாதநிழல், எற்கே-என்றனக்கேயுண்டாம். எ-று.

கனிதனைக்கந்தனைங்கையனின்னரின்களியையனை
கனிதனைக்கந்தனைத்தானசைத்தங்கைங்கரற்களிநக்
கனிதனைக்கந்தனையன்றகையாதியகன்கணிந்த
கனிதனைக்கந்தனையக்கஞ்சத்தாளெனக்காட்டநன்றே.

(இ - ள்.) கனிதனை - மாங்கனியை, கந்தன் - முருகனும், ஐங்கையன் - விநாயகரும் (ஆகிய), இன்னரின் - இவ்விருவர்களின், களியை - விருப்பத்தை (நீக்கியு), அனகன் - விமலன், இதன் - இதமானவன், ஐங்கந்தனை - ஐந்து சிரசினையும், தான் - தானானவர், அசைத்து-மெள்ளநடந்து, அங்கு - (தன்னைச்சுற்றிய) அவ்விடத்தில், ஐங்கரற்கு - விநாயகருக்கு, அளி - ஈந்த, நக்கன் - சங்கரன், நிதன் - நித்தன், ஐக்கு - அழகுக்கு, அந்தன் - முடிவில்லான், ஐயன் - கடவுள், தகை - தகைமையானகுணம்வாய்ந்த, ஆதியகன் - ஒற்றியூரன், கண் - அவரிடத்தில், இந்த - இரந்த, கனிதன் - கன்னியென்பவள், நை - வருந்துகின்றாள், கந்தம் - வாசனைகள், கையம் - நயந்த கஞ்சத்தாளென - இலக்குமிக்குஒப்பானவளென்று. காட்டல் - தெரிவிப்பது, நன்று - நலமாகும். எ - று. மாங்கனியையீந்தவெனமுடிக்க. (நற்றாயிரங்கல்.) (௬௯)

காட்டதலாட்டந்தரநல்கிடாதியகன்றகையன்
காட்டகலாட்டந்தரத்தனிடஞ்சென்றகாரிகையர்
காட்டகலாட்டந்தரச்சந்தனத்தினங்காணலத்தைக்
காட்டகலாட்டந்தரலேயிடையளகந்தனென்றே.

(இ - ள்.) காண் - (அனைவரும்)காணும்படி, தகல்-தங்குதல், ஆண்டு - அடிமைகொண்டு, அந்தரம் - சொர்க்கலோகத்தை, நல்கிடு - தரப்பட்ட, ஆதியகன் - ஒற்றியூரன், தகையன் - சாத்தகுணமுடையவன், காட்டு - சுடலையில், அகல் - விரிந்து, ஆட்டம்-நடனம்ஆடிய, தரத்தன் - திரத்தையுடையவன், இடம் - அவரிடத்தில், சென்ற-போன, காரிகையர்காள்-பாங்கிகள், தகலாள் - தகுந்தவர்களல்ல(ஏனெனில்), தந்தரம்-தகுத்ததந்தரமாகிய, சந்து - தூதினுக்கு, அனத்தினங்காள்-அன்னக்கூட்டங்களே, நலத்தை - தகுந்தவார்த்தையை, காட்டு - தெரிவிக்கும், (எப்படியெனில்), அகலாள்-உன்னைவிட்டுப்பிரியாள், தந்து - நூலைப்போலும், அரலை - கருமணல் போலும், இடை - இடையும், அளகம் - கூந்தலுமுடைய, தனென்றே சாத்தகுணத்தாளென்றே. எ - று. (௫௦)

கந்தநலங்கிதத்தண்ணளிகட்செறிகாக்களினிற்
கந்தநலங்கிதஞ்சேர்சிகியாதியகன்சிலையி
கந்தநலங்கிதன்கைக்கரியதளாய்க்கான்கடிசெ
கந்தநலங்கிதச்சீர்நடத்தானெனைக்காத்தனன்றே.

(இ - ள்.) கந்தம் நலம் - நன்மையாகிய வாசனைகளின், கிதம் தண் - குளிர்ந்த சங்கீதம்பாடும், அளி-வண்டினங்களும், கள் - தேனும், செறி - சூழ்ந்த, காக்களினில் - சோலைகளில், கந்தன் - முருகர், அலங்கு - வாகனமாக ஏறிக்கொண்டு அசைந்து இருக்கின்ற, இதம் சிகிசேர் - இதத்தையுடைய மயில்கள் தங்கிய, ஆதியகன் - ஒற்றியூரன், சிலை-மேருவில்லை, இகந்து-வெறுத்து,அனல்-அக்கினியை, அங்கி - மெய்ச்சட்டையாகவும், தன் - தனது,கை-கரத்திலும்,(கொண்ட), கரி-யானை, அதளாய் - தோலையுடையவனே, கான் - சுடலையாகிய, கடி - பேய்களுலாவும், செகந்தன் - இப்பூமியில், அல் - இருண்டகாலத்தில், அங்கிதம்-உடலில் தழும்பேற, சீர்-சிறந்த, நடத்தான் நடனஞ்செய்பவன், எனைக்காத்தல் - என்னைக் காப்பாத்துதல்-நன்றே - நன்மையாகும். எ - று. (௫௧)

காக்கணக்காலநலந்தான்கடையன்கலியகலக்க
காக்கணங்காலநட்சத்திரஞ்சேர்ந்தகங்கன்னனெற்கள்
காக்கணங்காலநண்ணுதியகத்தனகாகனநக்
காக்கணங்காலநற்கங்காளநித்தாகனதைநன்றே.

(இ - ள்.) கா - காப்பாய், கணக்காலம் - நிமைப்பொழுதில், நலம் - நன்மையைத் (தந்து), கடையன் - நாயினுங்கடையேனாகிய, கலியகல-(என்) வறுமைநீங்க, காக்கண் அங்கு-சோலையினிடத்தில், ஆலநட்சத்திரம்-வான்மீன்க(ளசையவும்,) சேர்ந்த - பொருந்திய, கம் - சலம்(சூழ்ந்த), கன்னல் - கரும்புகளும், நெற்கள் - பல நெல்லுகளும், காக்கணம் - காக்கட்டான் செடிகளும்,கால்-வாய்க்கால்களும்,அம்-அழகாக,நண்ணு-பொருந்திய,ஆதியகத்து-ஒற்றியூரினிடத்திலிருக்கும்,அனகா-களங்கமில்லாதவனே, கனம்-மேன்பட்ட,நக்கா-பரமனே, கண்-விண்டுவின் நேத்திரமும், அக்கு-அக்குமணியும், ஆல-மிருந்த, அனல் - அக்கினியும், கங்காள-எலும்புமாலையையும் சுமந்திருக்கின்ற, நித்தா - நித்தியனே, கனதை - (நினது) மேன்மை, நன்றே - நன்றாகுமே. எ - று. தான்-அசை. என்வறுமைநீங்க நன்மைதந்து நிமைப்பொழுதில்காப்பாயெனமாற்றுக. (௫௨)

கனதனந்தந்தனகக்கதிதந்தளிகத்தநித்தம்
கனதனந்தந்தனஞ்சேர்தடத்தாங்கல்கலையனன்க
கனதனந்தந்தனலஞ்செறியாதியகாகரிய
கனதனந்தந்தனகக்கரியதளாகத்திலனே.

(இ - ள்.) கனதனம் - சகலசம்பத்தும், தந்து - கொடுத்து, அனகம் - களங்கமற்ற, கதி - பதவியை, தந்து - ஈந்து, அளி - கிருபைசெய்யும், கத்த - கத்தனே, நித்தம் - தினமும், கனது - கனத்து, அனந்தம் - அனேகமாக, தனம் - பசுக்கன்றுகளும், சேர் - பொருந்திய, தடம் - விசாலமாகிய, தாங்கல்-கழிகளும், கலையன் - பிர்மதேவனும், நன் - நல்ல, ககன் - பாணத்தையுடைய விண்டுவும், அதனம் - அதிகமாகிய, தந்தம் - தங்கள் தங்கள், நலம் - கிரமப்படி, செறி - நெருங்கிய, ஆதி

யகா - ஒற்றியூரா, கரிய - கறுத்த, கனதம் - மேகநிறத்தையும், நம் - நல்ல, தந்தம் - கொம்புகளும் பொருந்திய, நகம் - மலை யொத்த, கரி - யானையின், அதளா - தோலைத்தரித்தவனே, கந் திலனே - பொய்யில்லாதவனே. எ - று. கந்திலனே அளியெ னக்கூட்டுக. (௫௩)

கத்தியங்காதகத்தாகனந்தாநகக்காத்திடசெ
கத்தியங்காதகனக்கரத்தாநெற்கதிர்கனல
கத்தியங்காதகச்சீர்தடத்தாதியகாநினைய
கத்தியங்காதகனனடைந்திட்டனன்காலினையே.

(இ - ள்.) கத்து - பொய்யானது, இயங்காத - பொருந் தாத, கத்தா - கத்தனே, கனந்தா - மேன்மைதருவாய், நக - விளங்கும்படி, காத்திட - (உயிர்களை) காக்க, செகத்தி - உலக மாதாவின், அங்கா - பாகனே, தகனம் - அக்கினியேந்திய, கர த்தா - கையனே, நெற்கதிர் - நெல்லின் கதிர்களும், கனல் - கரும்புகளும், அகத்தி - அகத்திமரங்களும், அம் - அழகிய,கா- சோலைகளும், தக - தகுதியாக, சீர் - சிறந்த, தடத்து - தடா கங்களும் வாய்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, நினை - உன்றனை, அகத்தியம் - நிச்சயமாக, காதகன் - கொடியபாதகனாகிய, நான் - யான், அடைந்திட்டனன் - சேர்ந்தனன், காலினையே- திருவடியே. (காப்பாய்) எ - று. கன்னலென்பது கனலென வாயது. (௫௪)

காலினதனஞ்சிகிதத்தைசிங்கங்கரிதடங்கா
காலினதனஞ்சிறந்தனலாதியகாதிகழே
காலினதனஞ்சினியகண்டாநகக்காத்தநின்றன்
காலினதனஞ்சிரத்தனன்காத்திடக்காண்டகையே

(இ - ள்.) காலி - பசுவினங்களும், கது - கத்தைகளும், அனம் - அம்சங்களும்,சிகி - மயில்களும், தத்தை - கிளிகளும், சிங்கம் - சிங்கங்களும், கரி - யானைகளும் சேர்ந்த, தடம்-தடா கங்களிலும், கா - சோலைகளிலும், காலின் - காற்றுகளின், அதனம் - அதிகம்,சிறந்த-சிறப்புற்ற, நல் - நல்ல, ஆதியகா -

ஒற்றியூரா, திகழ்-விளங்காநின்ற, ஏகாலி-திருக்குறிப்புத்தொண்டநாயனாரை, நத்தம்-இருண்ட, நஞ்சு-விஷம்பொருந்திய, இனிய - இனிதாகிய, கண்டா - கண்டனே, நக - விளங்க, காத்த - இரட்சித்தவனே, நின்றன் - உனது, காலினது-பாதங்களின், அம்-அழகை, நம் - நமது, சிரத்தனன் - தலையில் உடையேனை, காத்திட - இரட்சித்திட, காண் - பார்ப்பாய், தகையே - பெருமையையுடையவனே. எ - று. திருக்குறிப்புத்தொண்டநாயனாரை இரட்சித்த கண்டனே பெருமையுடையவனே பார்ப்பாயென முடிக்க. நது இடைக்குறை. (௫௫)

காண்டங்களிலத்தியாயங்களின்றகையினைநெஞ்சே
காண்டங்களிலத்தியல்கணிறைதலாங்கானிலரி
காண்டங்களிலத்திநேர்ந்ததணுதியகன்கனதை
காண்டங்களிலத்திநன்றாயநடந்திடக்காசிலையே.

(இ - ள்.) காண்டங்களில் - புராணங்களிலுண்டாய காண்டங்களிலும், அத்தியாயங்களின் - அப்புராண அத்தியாயங்களிலுமுண்டாகிய, தகையினை - தன்மையை, நெஞ்சே-மனதே, காண் - நீ பார்ப்பாயாக (அவ்வணம்பார்த்தால்), தங்கள் - தங்கள் தங்களுடைய, இலத்து - வீட்டினிடத்தில், இயல்கள்-தேவையானவைகளாகிய (சகல ஆசாரங்களும்), நிறைதல் - நிறைந்திருப்பது, ஆம் - ஆகும், கானில் - காட்டில், அரி - சிங்கங்களும், காண்டம் - குதிரைகளும், கள் - பேதம், இல் - இல்லாமல், அத்தி - யானைகளும், நேர்ந்த-ஒன்றோடொன்று எதிர்கொண்டு வாசஞ்செய்கின்ற, தண் - குளிர்ந்த, ஆதியகன்-ஒற்றியூரன் (அவன்பால்), கனதை - மேன்மை, தங்கு-பொருந்தி, அன் - நெருங்கிய, இலத்தி - மனைவியாள், நன்றாய் - நன்மையாக, நடந்திட - ஏவல்செய்திட, காசிலையே - குற்றமில்லையே, எ - று. நான்காமடியெதுகையில்காண் - அசை. இலம்-இடைக்குறை. [பாங்கியுடன்பாங்கிபகரல்.] (௫௬)

காசிலையத்தநகக்காத்தாசங்கரகனகக்
காசிலைய்த்தநதன்றனேயத்தகரியதணைக்
காசிலையத்தநலத்தினர்சேர்நின்கழலடைதல்
காசிலையத்தநங்கைக்களியாதியகாநலனே.

(இ - ள்.) கா - (அடியேனை) காப்பாய், சிலை-வில்லாக, அத்தநகம் - மகமேருவைக்கொண்ட, கரத்தா - னுகயனே, சங்கர - பரமனே, கனகக்காசு - பொற்காசுகளிருக்கின்ற, இல் - வடதிசைக்கு, ஐ - கடவுளாகிய, அ - அந்த, தனதன்றன்-குபேரனது, நேயந்த - தோழனே, கரியதள் - யானைத்தோலைப்போர்த்த, நக்கா - தற்பரனே, சிலையத்த - விக்கிரகமாகவுடையகடவுளே, நலத்தினர் - அடியார்கள், சேர் - பொருந்திய, நின் - உனது, கழலடைதல் - சேவடியை நான்சேருதல், காசிலை (தேவரீருக்கு) குற்றமில்லை, அத்தம் - பாகத்தை, நங்கைக்கு- பார்வதிக்கு, அளி - கொடுத்திட்ட, ஆதியகா - ஒற்றியூரா, நலனே - (அது) நன்மையே (யாகும்) எ - று. (ருஎ)

காநலந்தானடைதற்காரணந்தான்கணங்களடை
காநலந்தானடைசேர்சக்தெனச்சாகரியையின்றன்
காகலந்தானடைசெய்தசிலைக்கரகாக்களிற்சேர்
காகலந்தானடையாதியகாசங்கரநலனே.

(இ - ள்.) கா - (அடியேனை) நீகாக்கும்படி, நலந்தான் அடைதல் - நான் அடைக்கலம் சேருதல் நன்மைதான், காரணந்தான்-காரணப்பொருளாகும், கணங்கள்-பூதங்கள்; அடை- பொருந்திய, கானல் - சுடலையில்(ஆடுதற்கு), அந்தா - அழகானவனே, நடை - வீட்டினடையில், சேர் - பொருந்தி, சக்தெனவாதாக,சாகரியையின்தன்கான் - பரவையாரிடத்தில், மணங்கமழும், அல் - இருண்ட, அம் - அந்தக்காலத்தில்,தா-தாவிநடைசெய்த - நடந்துவந்த, சிலைக்கர-பொன்கிரிவில்லேந்தும், கையனே, காக்களில் - சோலையினிடத்து, சேர் - பொருந்திய கான் - பரிமளங்களும், அலம் - கலப்பைகளும், அடை - இலைகளும் (பொருந்திய), ஆதியகா-ஒற்றியூரா, சங்கர-சங்கரனே, நலனே - நன்மையளிப்பவனே. எ - று. நான்காமடியெதுகையில் தான் அசை. (ருஅ)

காநகரத்தநகத்தின்சிலையினர்காதினிறு
காநகரத்தநதனேயநக்கர்கரிசகள
காநகரத்தநடர்தலையைந்தக்கரர்நதிசே
காநகரத்தநதாளாதியராட்காரியரே.

(இ - ள்.) கரம் - கையினிடத்தில், நகர் - அசைகின்ற, அத்தம் - பொன்னிறமாகிய, நகத்தின் - மகமேருவினை, சிலையினர் - வில்லாகவுடையவர், காதினில் - செவிகளில், நாகர் - பாம்பினர், அனகர் - களங்கமற்றோர், அ - அந்த, தனதன் - குபேரனுக்கு, நேயம் - நேசமாகிய, நக்கர் - நக்கர், கரிசு அகல் - குற்றம்நீங்கிய, நகரநகரத்து - நகரவெழுத்திற்குஇனமாகியநகரவெழுத்து, அடர்தலை - முதலில்நெருங்கிய, ஐந்தக்கரர் - பஞ்சாட்சரத்தர், நதி - கங்கைபொருந்திய, சேகரம் - முடியும் நகு - விளங்கிய, அரத்தஅன -(பாவிகட்கு) அரத்தை யொத்த தாள்-பாதங்களும்வாய்ந்த, ஆநியகர் - ஒற்றியூரர், ஆள் - (அடியேனை) ஆளும்படியான, காரியரே - காரியமானவரே. எ - று.

காரியக்கண்ணலரிதிங்களனலன்காத்தனர்தங்
காரியங்கண்ணலக்காநிரையாநியகத்தினனு
காரியங்கண்ணலர்த்தேனினைதாணினைகாரியஞ்சிங்
காரியங்கண்ணலத்தன்சிரந்தன்னிறண்கங்கையனே.

(இ - ள்.) காரியம் - (நமக்கு அவர்) செய்யவேண்டிய காரியம், கண் - நேத்திரங்களாக, அலரி - சூரியனையும், திங்கள் - சந்திரனையும், அனலன் - அக்கினியையுமுடைய, காத்தல் நத்தம் - (நமது பரம சிவம்) காக்குந் தன்மையுடையவரே யாம், கார் - மேகங்களும், இயம் - ஒலிகளும், கள் - தேனும் பொருந்திய, நலம் - நன்மையைவாய்ந்த, கா - சோலைகள், நிரை - நிறைந்த, ஆநியகத்தனன் - ஒற்றியூரன், நாகாரி - கருடனது, அங்கண் - அழகியதோளில், அலர் - விளங்கிய, தேவின்டுவானவர், நினை-சிந்திக்கின்ற தாள் பாதங்களை, நினை-எண்ணு, காரியம் - (நமக்கு காரியமாகும்,சிங்காரிஅங்கு-உமையவளிடத்தில், அண்ணல் அத்தன் - பாகத்தனாகிய கடவுள்,சிரந்தன்னில்-சிரசின்மீது, தண் - குளிர்ந்த, கங்கையன் - டகீரதியையுடையவன். எ - று.

கங்கையக்கஞ்சந்திரசேகரத்தினன்கத்தனளி
கங்கையக்கஞ்சந்தியாயகாளத்திநக்கன்றடக்கா
கங்கையக்கஞ்சந்திகழாதிகாடனங்கையரில்ல
கங்கைபக்கஞ்சந்திசெய்தேற்றலினனைக்காணினன்றே.

(இ - ள்.) கங்கை - பகீரதியையும், அக்கு - எலும்புமாலையையும், அம் - அழகிய, சந்திரன் - திங்களையுமணிந்த, சேகரத்தினன் - சிரசினன், கத்தன் - கடவுள், அளி - (அவர்) பெற்ற, கம்கையக்கு - யானையாகிய சிரசானவிநாயகருக்கு, அஞ்சந்தியாய் - அஞ்சந்தி விநாயகரென்று பெயரிட்டழைத்த, காளத்திகக்கன் - காளத்தியூர்க்கடவுள், தடம் - விசாலமாகிய, கா - சோலைகள், கம் - ஆகாயந்தளாவியும், கையம் - தடாகங்களில், கஞ்சம் - தாமரைகள், திகழ் - விளங்கிய, ஆதிநாடன் - ஒற்றியூரன் - நங்கையர் - தாருகாவனத்தின்பத்தினியர்களின் இல்லகம் - வீடுகள்தோறும், கை - தனதுகரத்தில், அம் - அழகிய, கம் - பிரமகபாலமானது, சந்திசெய்து - பொருந்துதல் செய்து, ஏற்றல் - யாசிக்குந்தன்மையையுடைய, இனனை - கங்காளனை, காணில் - அவரைநாம்பார்க்க, நன்றே - நலமேயாகும். எ - று. (௬௧)

காணியந்தந்தளிதந்தாதரிக்கக்கடனிலையா
காணியந்தந்தளியத்தந்தளியலைக்காழனைநாற
காணியந்தந்தளிர்நேரியலின்றனைக்காண்கிலைநான்
காணியந்தந்தளிக்காநிரையாதியகாகனனே.

(இ - ள்.) காண் - (அடியேன்) தரிசிக்கும்படியான, நியம் - உண்மையை, தந்து - கொடுத்து, அளி - இருபையும், தந்து - கொடுத்து, ஆதரிக்க - ஆதரவுசெய்ய, கடனிலையா - (தேவரீருக்கு) சொந்தமில்லையா, காணி - பூமியின், அந்தம் - அழகினை, தள்ளி - நீக்கி, அத்தம் - பொன்னையும், தள்ளி - துறந்து, அலை - அலைகின்ற, காழன் - உறுதியையுடைய நான், நாற்காணி - காலாகிய, அம் - அந்த, தம் - தமது, தளிர் - இதழை, நேர் - ஒப்பாகிய, இயலின்றனை - செய்கையின்றன்னை, காண்கிலை - தெரிகிலை, நான் - யான், காண் - நீயறிவாய், இயம் - ஒலிகளும், தந்து - நூலுகளும், அளி - வண்டுகளும் (தங்கிய), கா - சோலைகள், நிரை - நிரைத்த, ஆதியகா - ஒற்றியூரனே, கனனே - கனமானவனே. எ - று. (௬௨)

காகனந்தாநலங்கானந்தணற்கனங்காழளித்த
காகனக்தாநலங்காதகதியளிகாண்டநற்சங்
காகனந்தாநலங்காரிற்செலச்செய்கழனிதடக்
காகனந்தாநலங்கார்கிறையாதியநத்தலனே.

(இ - ள்.) கா - (அடியேனை) காத்து, கனக்தா-மேன்மைதருவாய், நலங்கான் - (இது) நன்மையேயாகும், அந்தணற்கு - பிராமணனுக்கு, அனம் - சாதத்தின், காழ் - உறுதியை, அளித்த - கொடுத்த, காகம்-காக்கையானது, நந்தா - கெடாதபடி, நலங்காத - நலிக்கிவிடாத, கதி - மோட்சத்தை, அளி - கொடுத்த, காண்டம் - பொன்னுலாகிய, நல் - நல்ல, சங்கா - தில்லையூரா, கனந்து - பெருத்து(உள்ள), ஆன் - இடங்கள், அலம் - கலப்பைகளைக்கொண்டு, காரில்செலச்செய் - நீரில்உழுதுபயிரிடும்படிசெய்யும், கழனி - வயல்களும், தடம்- விசாலமாகிய, கா - சோலைகளில், கனம் - மேகமானது, அலங்கு-அசைகின்ற, ஆர் - பொருந்திய, கிரை ஒழுங்கைவாய்ந்தமான, ஆதியகம் - ஒற்றியூரென்னும், தலனே - பூமியையுடையவனே. எ - று. கடையடி யெதுகையில் தான்-அசை. தலனேநலங்கான் எனமுடிக்க. (௬௩.)

கத்தனங்கந்தனின்றந்தையகளங்கன் காஞ்சியின
கத்தனங்கந்தனிறைதடாகந்தயக்கஞ்சநல்ல
அகத்தனங்கந்தனிறையாதியகன்கதிர்செயன
கத்தனங்கந்தனினங்கையன்காத்திடக்காலகனே.

(இ - ள்.) கத்தன்-கடவுள், அம்-அழகிய, கந்தன்-முருகருக்கு, இன்-இனிய, தந்தை-பிதா, அகளங்கன்-களங்கமற்றவன், காஞ்சியின் - கச்சிநகராகிய, அகத்தன் - இடத்தினன், அங்கு-அந்நகரின், அந்தன்-அழகினன், இறை-தலைவன், தடாகத்து-குளத்து, அயம் - நீரினிலுள்ள, கஞ்சம் - தாமரையிலும், நல்-நல்ல, அகத்து-உள்ளத்திலும், அனம்-அன்னங்களும், கந்தம்-பரிமளங்களும், நிறை-நிறைந்த, ஆதியகன்-ஒற்றியூரன், கதிர்செய் - பிரகாசம்புரிகின்ற, அனகம்- களங்கமற்ற, தன்-தனது,

அங்கந்தனில்-உருவத்தில், நங்கையன்-பார்வதியான், காத்திட (நம்மை) இரட்சித்திட, கால்-பாதமாகிய, அகன்-இடத்தினன். எ - று. (௬௪)

காலனலிதரக்காய்ந்திடநேரந்தக்காலநின்றன்
காலனலிதரக்காழாலழித்திடக்காரணந்தான்
காலனலிதரக்காநிரையாதியகாகலியே
காலனலிதரக்காய்நெகிழ்ந்தேயான்கலங்கினனே.

(இ - ள்.) காலன் - எமனானவன், நலிதர - (நான்) நலியும்படி, காய்ந்திட - கோபிக்க, நேர் - (என்னிடத்து)சேரும், அந்தக்காலம்-அக்காலத்தில், நின்றன் - உனது, கால் அனலிதரம் - நெருப்பாகியதரத்தினை (ஒத்த) பாதமாகிய, காழால்-வயிரத்தால், அழித்திட - (அவனை) அழியச்செய்ய, காரணம்-நினக்குக்காரணமாகும், கால்-காற்றும், அல்-இருள்நிறைந்ததாய, நன் - நல்ல, இதரம்-மற்றவளமும்சேர்ந்த, காநிரை-பொழில்சூழ்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, கலியே - (எனது) வறுமையே, கால - னைவிட்டுநீங்க, நல்இது - இது சமயம் நன்றாயிருக்கின்றது, அரக்காய்-அரக்குப்போல், நெகிழ்ந்தே-உருகியே, யான்-நான், கலங்கினன் - கலக்கமுற்றேன். எ-று. இரண்டாமடியில்-தான்-அசை. (௬௫)

கலங்கினனத்திநிழலிலடர்ந்தகனந்திகழ
கலங்கினனத்திசைகாநிரையாதியகாளங்க
கலங்கினனத்தியதளரகாசேகரத்தசற்கி
கலங்கினனத்தின்கிரியியென்றெணற்கந்தரனே.

(இ - ள்.) கலங்கினன் - (அடியேன்) கலக்கமுற்றேன் அத்திநிழலில் - அத்திமரத்தின்சாயலில், அடர்ந்த - நெருங்கியிருந்த, கனம் - மேகங்கள், திகழ் - விளங்கிய, அகல் - அகன்ற, அங்கு - அவ்விடத்து, இனன்-சூரியனது, திசை-திக்காகிய (கிழக்கினை), கா - சோலைகள், நிரை - சூழ்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, களங்கு - குற்றங்கள், அகல் - நீங்கிய, அங்கி - மெய்ச்சட்டையாக, நன் - நல்ல, அத்தி - யானையின், அதள்-தோலையுடைய, அர-பரமனே, கா - காப்பாய், சேகரம் - முடிய

னது, தசற்கு - பத்தாகிய இராவணனுக்கு, இகல் - சத்துருவாகிய, அங்கி - அக்கினிபோன்றஇராமரானவர், நம் - நமக்கு, நத்து - சங்கையும், இன் - இனிய, திகிரி - சக்கரத்தையும், ஈ - கொடுத்தவனே, என்று - என்றிப்படியாக, எண் - நினைக்கின்ற, அல் - இருண்ட, கந்தரனே - கழுத்தனே. எ - று. கந்தரனே காப்பாயெனக்கூட்டுக. இரண்டாமடி யெதுகையில் அ - அசை.

கந்தரங்காரியலாசங்கனகக்கயிலையையி
கந்தரங்காரியராய்த்தென்றிசையினைக்காத்திடன
கந்தரங்காரியங்கார்சிரத்தாதியகத்தரகா
கந்தரங்காரியங்கேட்டளிசேர்சிரக்கண்ணியனே.

(இ - ள்.) கந்தரம் - கழுத்தானது, கார் - கறுத்த, இயல் - தன்மையைவாய்ந்தும், ஆகம் - தேகம், கனகம் - பொன்னிறமுமாக, கைலையை - வெள்ளிமலையை, இகந்து - (பிரகாசத்தால்) வெறுத்து விளங்கும், அரங்கு - இரசித சபையிலிருந்து, ஆரியராய் - சுந்தரபாண்டியராய், தென்றிசையினை - மதுராபுரியை, காத்திடு - இரட்சித்த, அனகம் - களங்கமற்ற, தரம் - திரத்தைவாய்ந்த, கார் - கங்கையும், இயங்கு - பொருந்திய, ஆர் - ஆத்திமாலையுமுடைய, சிரத்து - முடியைவாய்ந்த, ஆதியகத்து - ஒற்றியூரின், அர - அரனே, கா - காப்பாய், கந்தர் - சண்முகக்கடவுள், அம் - அழகிய, காரியம் - பிரணவத்தை, கேட்டு - சொல்லக்கேட்டு, அளிசேர் - கிருபைகூர்ந்த, சிரம் - சிரசாகிய, கண்ணியனே - மாலையனே. எ - று. மாலையனே காப்பாயெனச்சேர்க்க. (௬௭)

கண்ணியக்கந்தலையற்களங்கத்தசிங்கத்ததளின்
கண்ணியக்கந்தலைசங்கிடைத்தீக்கணகாக்களினிற்
கண்ணியக்கந்தலையண்டாதியகாகலியினையென்
கண்ணியக்கந்தலையச்செயினியுதாங்காசிலையே.

(இ - ள்.) கண்ணி அக்கு - எலும்பு மாலையையும், அம் - கங்கையையும் அணிந்த, தலை - சிரசைவாய்ந்த, அல் - இருண்ட, களம் - கண்டம்பொருந்திய, கத்த - கத்தனே, சிங்கத்து -

சிங்கத்தின், அதளின் - தோலினை, கண்ணிய - கோபித்துரி த்த, கந்தல் - கிழிந்ததானது, அசங்கு - அசைகின்ற, இடை- இடுப்பைவாய்ந்த, நீக்கண் - அக்கினிக்கண்ணனே, காக்களி னில் - சோலைகளில், கள்-தேன், நியம் - நியதமாகப்பொழிய, கம் - ஆகாயத்தின், தலை - முகட்டளவு, அண்டு - நெருங்கிய, ஆகியகா - ஒற்றியூரா, கலியினை - வறுமையாக, என்கண் - என்னிடத்தில், இயக்கு- பொருந்திய, அந்து-அந்தப்பூச்சானது அலைய- கெடும்படி, செய் - புரிவாய், இனியுதாம்-(அச்செயல்) இனிமையாகும், காசிலை -(அங்ஙனம்செய்தல்) குற்றமில்லை.

காசிலையா டையனந்தானிலையக்கலியகலக்
காசிலையாடையலத்தாகழையள்கன கனன்று
காசிலையாடையங்கத்தா தணுதியகாகளங்கந்
காசிலையாடையசாக்கியர்தன்கைக்கலினியனே.

(இ - ள்.) காசிலை - ஒருகாசேனுமில்லை, ஆடை - வஸ் திரமும், அனந்தான் - அன்னந்தானும், இலை - இல்லை, அ - அந்த, கலியகல - வறுமைநீங்க, கா - காத்திடுவாய், சிலையாள் மலையரையன் ஈன்றபுத்திரியாகிய, தையல் - உமையவளின், அள்-நெருங்கும், அத்தா-பாகனே, கழை-மூங்கில், அள்-நெருங் கிய, கனகம்-பொன்னிறமாகிய, நல்-நல்ல, நாகா-மேருவினை, சி லையாள் வில்லாகஆளும்படி, தயங்கு-விளங்கிய, அத்தா - கைய னே, தண் - தண்ணிய, ஆதியகா - ஒற்றியூரனே, களங்கம்-கரவு தன்மையும், காசு - குற்றமும், இல் - இல்லாமல், ஆடு - நடிக் கின்ற, ஐய - ஐயனே, சாக்கியர் - சாக்கியநாயனார், தன் - தன து, கை-கரத்திலிராநின்ற, கல் - கல்லாலடியுண்ட, இனிய னே - இனிமையானவனே. எ - று. (௬௧)

கலியகத்தாநலக்தான்சற்சனரின்கரிசினைநீ
கலியகத்தாநக்கதணுதியகாகடிதனின
கலியகத்தாநதெனட்கிழிதிட்டதைக்கண்டேற்றிரிந்
கலியகத்தாநக்தநண்ணியநாகநற்காதினனே.

(இ - ள்.) கலி-என்வறுமையானது, அக - விட்டுநீங்க, தாநலம் - நன்மை தருவாய், சற்சனரின் - நல்லோர்களின்,

கரிசினை-குற்றங்களை, நீ-நீ, கலிய-வேர்களையும்படியான, கத்தா-கத்தனே, நக்க - சம்புவே, தண் - தண்ணிய, ஆதியகா - ஒற்றியூரா, கடிதனில் - சுந்தரசுவாமியின்கலியாணத்தில், நகல் - நகல் ஓலையை, ஈய - கொடுக்க, கத்தானதென - பொய்யென்று சொல்லி, கிழித்திட்டதை - அச்சுந்தரர்கிழித்ததை, கண்டு - பார்த்து, எதிரில் - நேரில், கலி - புலம்பி, அகத்து - உள்ளத்தில், ஆனந்தம் - சந்தோஷத்தை, நண்ணிய - பொருந்திய, நாகம் - பாம்பையணிந்த, நல் - நல்ல, காதினனே - செவியனே, எ - று. முதலடியில் தான்-அசை. (எ௦)

காதினச்செங்கனியன்னநீராரசங்கத்தரிநேர்
காதினச்செங்கனியங்கற்றகைத்திரங்கண்டறிநீ
காதினச்செங்கனியத்தையிழந்திடற்காரணந்தான்
காதினச்செங்கனியச்செறியாதியகாதரனே.

(இ - ள்.) கா - காப்பாய், தின - புசிக்க, செம் - சிவந்த, கனி - பழவர்க்கமும், அன்னம் - சாதமும், நீர் - சலமும் ஆ - பசுவின், ரசம் - பாலும் தயிரும் (ஆகியவிவையெல்லாம்), கத்தரி - கத்தரிக்கோலை, நேர் - சமானமாகிய, காதி-செவியையுடைய பெண்ணுக்கு, நச்சு - விஷமாகும், எங்கன் - எவ்விதம் (இவை), இயங்கல் - பொருந்துமென்ற, தகைத்திரம் - தன்மையினுறுதியை, கண்டு - பார்த்து, அறி - தெரிந்துகொள்வாய், நீ - தேவரீர், காதின்- (அப்பெண்ணின்மீது) கோபித்தால், அச்சு - ஆவி, எம் - எமது, கனி - பெண்ணானவள், அந்தை - அதை, இழந்திடல் - இழந்துவிடுதல், காரணந்தான்- காரணமாகும், கா - சோலைகளில், தினம் - எந்நாளும், செம். செழித்த, கனிய - கனிந்ததேனொழுகுதல், செறி - நெருங்கிய, ஆதியகா - ஒற்றியூரா, தரனே - திரத்தனே. எ - று. [நற்றுயிரங்கல்.] (எக)

காதரங்கத்தனைக்கஞ்சனையண்டனைக்கண்ணினையே
காதரங்கத்தனைஞ்சக்களக்கத்தாங்கற்றடத்த
காதரங்கத்தனையத்ததண்ணுதியகாகரிசை
காதரங்கத்தனைச்சங்கரிகாணடக்காந்தியனே.

(இ - ள்.) கா - இரட்சிக்கும் தொழிலேயுடைய, தரங்கத்தனே-கடலில்தயின்றவிண்டுவின் ஆமையோட்டையும், கஞ்சனே - பிரமன்சிரமாலையையும், அண்டனே-இந்திரனெலும்பையும், கண்ணினேயே-நேத்திரத்தினையே, காதர்-செவியாகியபாம்புகளுமணிந்த, அங்கந்த - தேகத்தனே, கஞ்சம்-விஷம்பொருந்திய, களக்கத்த - கண்டத்தையுடைய கத்தனே, நாங்கல் - கழிகளும், தடத்த - விசாலமாகிய, கா - சோலேகளில், தரம்-திரத்த, கந்தம்-வாசனைகளும் (நிரைந்த), நயத்த - நயப்பாகிய, தண் - தண்ணிய, ஆதியகா-ஒற்றியூரா, கரிசை- (அடியேனது) குற்றத்தை, காது - கோபித்தழிப்பாய், அரங்கத்து - கனகசபையில், அனே - எனதன்னேயாகிய, சங்கரி - பார்வதியாள், காண் - பார்த்திடும்படி, நடம் - நடனம்செய்த, காந்தியனே - பிரகாசத்தனே. எ - று. (எஉ)

காந்தியங்காநிரையாதியகத்தகனத்தநகக்
காந்தியங்காநிரைகஞ்சாசனத்தினன்கண்ணனல்லே
காந்தியங்காநிரைதேடியற்சிறெண்கழையதனில்
காந்தியங்கீநிரையந்தானறத்தடக்காஞ்சியனே.

(இ - ள்.) காந்தி - ஒளிபொருந்திய, அம் - சலம்சூழ்ந்த, கா - நந்தவனங்கள், நிரை - நிரைந்த, ஆதியத்த - ஒற்றியூரா, கனத்த - பருத்த, நகம் - இமயமலேயின், காந்தி - குமாரியின், அங்கா - தேகனே, நிரை - ஒழுங்காக, கஞ்சாசனத்தினன் - தாமரைமலரில்வீற்றிருக்கும் பிரமனும், கண்ணன் - விண்டுவும், நல் - நல்ல, ஏகாந்தி - உலகமாய்கைநீங்கிய சன்னியாசியும், அங்கு - அவ்விடத்தில், ஆன் - இடபங்கள், இரைதேடு - உணவுதேடுகின்ற, இயல் - தன்மையைப்போல், சீர் -(உனது) சிறப்பினேயே, எண் - நினைக்கின்ற, கழையதனில் - மூங்கிலில், காந்தி - தோன்றியகுமாரனே, அம் - (அடியேனே) அழகாக, கா - காப்பாய், நீர் - தேவரீர் (என்பால்கொண்ட), ஐயம் - சந்தேகங்கள், அற - என்னைவிட்டுநீங்கிட, தடம் - விசாலமாகிய, காஞ்சியனே - கச்சிப்பதியானே. எ - று. கடையடியில் தான் - அசை. என்னைவிட்டுநீங்கிடக்காப்பாயென மாற்றிக்கொள்ளுக. (எஈ)

காஞ்சிநகரத்தநிலையிளுடகதலிகன்னல்
காஞ்சிநகரத்தரணியையாதியகாகனலி
காஞ்சிநகரத்தநிரஞ்சனசங்காகழறல்
காஞ்சிநகரத்தனத்தாணிழலுகரிசறற்கே.

(இ - ள்.) காஞ்சிநகரத்த - கச்சிப்பதியானே, நிலையிளுடை - சிதம்பரநாட்டினனே, கதலி-வாழைகளிலும், கன்னல்-கரும்புகளிலும், காஞ்சி - காஞ்சிமரங்களிலும், நகரதாணியை - சூரியன் ஊர்ந்து செல்லத்தகுந்த, ஆதியகா - ஒற்றியூரனே, கனலி - அக்கினியானது, காஞ்சின - வாளும்படியான, கரத்த - கையனே, நிரைஞ்சன - நிரைந்தபொருளாகிய, சங்கர - சங்கரனே, கழறல் - யான்சொல்லுதல் (என்னவெனில்), காட்சி - மோட்சத்தில், நகு - விளங்கிய, அரத்தன - அரத்தையொத்த, தாள் - பாதத்தின், நிழல் - சாயலை, தா-(அடியேனுக்கு) தருவாயாக, கரிசு - எனதுகுற்றங்கள், அறற்கே-விட்டு நீங்கும்படிக்கே. எ - று. நீங்கும்படிக்கே தருவாயாகவெனக் கொள்க. (எச)

கரியசலத்ததளாயநலங்ககடற்றிரைத
கரியசலத்தத்தையடரிளுதியகாதனங்கங்
கரியசலத்தானேச்செத்ததீரகனத்தகநி
கரியசலத்தலையாய்கதியீயழற்கையரனே.

(இ - ள்.) கரி - யானையென்னும், அசலத்து - மலையின், அதளாய் - தோலையுடைய, நல் - நல்ல, அங்க - தேகனே, கடற்றிரை - கடலின் அலைகள், தகர் - ஒட்டும்படியாகிய, இ - இந்த, அசல் - சுத்தமான, அ-அந்த, தத்தை - கிளிகள், அடர்-நெருங்கிய, இனி - இனிய, ஆதியகா - ஒற்றியூரா, தன்-தனது, அங்கம் - சரீரம், கரிய - கறுத்த, சலத்தரனை - சலந்தரனை, செத்த - வென்ற, தீர - தீரனே, கனத்த - மேன்மையாகிய, கம் - வெளுத்த, நிகரிய - ஒப்பாகிய, சலம் - கங்கைபொருந்திய, தலையாய் - சிரசினனே, கதி - மோட்சத்தை, ஈ - தருவாய், அழல் - அக்கினிபொருந்திய, கையரனே-கையையுடைய சிவனே. எ - று. (எரு)

கையநிதக்தரநெஞ்சந்தனிற்செங்கனகநன்னங்
கையநிதந்தரத்தைத்தரநைந்தற்கடத்தனலி
கையநிதந்தரங்கத்தினன்செய்யகலையினனீட்
கையநிதந்தரங்காணச்செயச்செயக்காத்திரனே.

(இ - ள்.) கைய - நான்வெறுப்புற சம்பாதித்து, நிதம் - தினந்தோறும், தர-(மாதர்கட்கு) - கொடுக்க, நெஞ்சந்தனில் - (எனது) மனதினிடத்தில், செம் - சிவந்த (துன்பமுறச்சேகரித்த அந்த), கனகம் - பொன்னினை, நல் - நல்ல, நங்கை - பெண்ணானவள் (கைக்கொண்டு), அநிதம் - அன்னிதத்தின், தரத்தை - திரத்தை, தர - (அவளெனக்கு) கொடுக்க, நைந்தல் - அதனால் வருந்துதலை, கடத்து - நீக்குவாய், அனலி - அக்கினியேந்திய, கையன்-கரதலனே, இதம்-இன்பமாகிய, தரங்கத்தினன் - கடலில்துயின்ற விண்டுவுக்கும், செய்ய - செவ்விதாகிய, கலையினன்-பிரமனுக்கும், நீள்- நீண்ட, கையன் - அயிராவதத்தனாகிய இந்திரனுக்கும், இது - இதுதானென்று, அந்தரம்- (அசுரராலிழந்த) அவரவர்பதியை, காணச்செய்-(மறுபடியும்) பார்க்கும்படிசெய்த, அ - அந்த, செயம்-வீரத்தன்மையைவாய்ந்த, காத்திரனே-காம்பீரனே. எ-று.

காத்திரங்காதநஞ்சானனின்செய்கைக்கடனெனநீட்
காத்திரங்காதநற்கந்தநீடாதியகத்ததில்லைக்
காத்திரங்காதநச்சீர்நடையாளினைக்கண்டதென்னக்
காத்திரங்காதநின்றாரடையகடத்தினளே.

(இ - ள்.) காத்து - (முதலில்) இரட்சித்து, இரங்காத-(பின்) இரக்கமிராத, நஞ்சான - மனமாகிய, நின் - உனது, செய்கை - நடக்கையின், கடனென - கடமையென்ன, நீள் - நீண்ட, கா - சோலைகளின், திரம் - மேன்மையால், காதம் - காததூரம், நல் - நல்ல, கந்தம் - பரிமளங்கள், நீடு - வீசும், ஆதியகத்த - ஒற்றியூரா, தில்லை - சிதம்பரத்தில், காத்திரம் - காம்பீரமாகியநீர், காது - (அப்பெண்ணின்மீது) கோபித்தல்- அனம் - அன்னத்தைப்போல், சீர் - சிறந்த, நடையாள் - நடக்

ந்தகைமைவாய்ந்த பெண்ணனவள், கண்டதென்-செய்ததெ
ன, அக்காதிரம் - மேன்மையில் மூத்தவளேயென்று, கா
வளே) காப்பாய், தனம் - (அவள்) முலேயின்மீது, நின் -
னது, தார் - மாலேயானது, அடைய - பொருந்த, கடத்தின
ள - என்னையனுப்பினளே, எ - று. (தாதி தலைவனையிரத்தல்)
ன்முடியில் இன் ஐ சாரியைகள். (எஎ)

கடத்தினகத்ததளாய்ச்செய்யகளினக்கண்ணினன்சே
கடத்தினகத்ததற்காத்திடகின்றன்கடன்றனிய
கடத்தினகத்ததாத்ததண்ணுறியகாதணலே
கடத்தினகத்ததத்தாலலேந்தாளளிகண்டரனே.

(இ - ள்.) கடத்தின் - மதத்தைவாய்ந்த, நகத்து - யா
னையின், அதளாய் - தோலாடையாய், செய்ய-சிவந்த, நளின-
தாமரையையொத்த, கண்ணினன் - கேத்திரத்தையுடைய
விண்டுவாகிய, சே - இடபத்தை, கடத்தின-நடத்தின, கந்த-
த்தனே, நற்காத்திட - (என்னை) இரட்சித்திட, நின்றன் -
உனது, கடன் - கடனாகும், தனி - ஒப்பற்ற, அகடு-(ஆலயத்
தின்) நடுவிலுள்ள, அத்தி - அத்திமரத்தின் (சமீபத்து), நகு-
விளங்கிய, அத்த - அத்தனே, தாத்த - இரத்த, தண் - தண்
ணிய, ஆறியகா - ஒற்றியூரா, தண் - குளிர்ந்த, அலைகள் - கட
லின்திரைகள், தத்து - தாவுதலால் உண்டாகிய, இனம்-கூட்
டமானது, கத்து - சத்திக்கின்ற, அதத்தால் - அம்சத்தால்,
அலேந்தாள்-(என்மகள்) பரதவித்தாள், அளி-காப்பாய், கண்டு-
பார்த்து, அரனே-சிவனே. எ - று. [நற்றாய்வேண்டல்.](எஅ)

கண்டரங்கந்தனிற்காளநங்கையர்கழையளித்த
கண்டரங்கந்தனினட்டதகையினர்கார்தடக்காக்
கண்டரங்கந்தனிரைந்ததணுதியகத்தரின
கண்டரங்குந்தனிரஞ்சனரென்றனேக்காத்தனன்றே.

(இ - ள்.) கண்டர் அங்கந்தனில் - சரீரத்திலுள்ள மிட
ற்றினில், காளம் - விடத்தையுடையவர், நங்கையர் - பார்
வதியையுடையார், கழை - மூங்கில், அளித்த - பெற்ற, கண்டு-

கற்கண்டுபோல்றவர், அரங்கம் - கனகசபையில், தனி - ஒ
பற்ற, கட்ட-சுடித்த, தகையினர் - தயையாகியகுணத்தர், கா
மேகநிறைந்த, நடம்-விசாலமான,காக்கண்-சோலையினிடத்
தரம் - மேன்மையாகிய, கந்தம் - வாசனை, நிறைந்த - சூழ்ந்
தல்ச - தண்ணிய, ஆதியசத்தர் - ஒற்றியூரர், இன் - இனிய
அகண்டர் - வியாபகமானவர், அக்கு- அவ்விடத்தில், அந்த
அழகிய, நிரஞ்சனர் - நின்மலர், என்றனை-(அவர்) என்னை
காத்தல்-இரட்சித்தல், நன்றே-(அவருக்கு) நலமேயாம். எ-று.

காத்தனத்தாலகந்தாத்தடந்தேன்றிகழலரடர்
காத்தனத்தாலநடங்கலிதீர்த்தாள்கடற்றரணி
காத்தனத்தாலகலாக்காத்தாற்கைதங்கச்சியென்னக்
காத்தனத்தாலகஞ்சேரறணுதியகற்கறையே.

(இ - ள்) காத்தன் - துலாராசிவரையில், அ - அந்த
தாலம் - பூமியினின்று, கம் - ஆகாயத்தைநோக்கி, தா - தா
தலையுடைய,நடம்-நீண்ட,தேன் தேனானது, திகழ்-விளங்கி
அலர் - புட்பங்கள், அடர் - நெருக்கிய, கா - சோலைகள்சூ
ந்த, ஆதியசற்கு - ஒற்றியூரர்க்கு, தனத்தால் - திரவியக்கா
ணத்தால், அகடு - வயற்றிலுண்டாகும், அம் - அந்த, கலி
தரித்திரத்தை, தீர்த்தாள் - நீக்கியடிமைகொள்ளுபவற்கு, கட
ல் - சமுத்திரஞ்சூழ்ந்த, தரணி-பூமியை, காத்த - இரட்சித்த
கத்து - சங்கானது, ஆல் - அசைதல், அகலா - நீங்காத, கரத்
தாற்கு - கையையுடைய விஷ்ணுவுக்கு, ஐ - சுவாமியாகிய அவ
கட்கு, தங்கச்சி - தாதியாகியதங்கைகளே, என் - எனது, அக்
கா - தமக்கைகளே, தனம் - முலையையும், தானு - நாவினை
யும்,அகம்-என்வசமாகும்படி சேரல்- அடையச்செய்தல், தண்-
குளிர்ந்த (சொல்லால்), அறையே - சொல்லுவாயே. எ - று.
(அதுவிடல்) ஒற்றியூரர்க்கு என்னும் பதந்தினைச் சோலைக்குப்
பின்வைக்கப்பட்டது. (அ௦)

கற்கறையத்தநீள்சிலைக்கண்டர்கடியினின்
கற்கறையத்தனத்தத்தடையச்செய்கதத்தடச்சிங்
கற்கறையத்தனங்கந்திடச்சென்றனன்காஎன்கீலையி
கற்கறையத்தனங்கைக்காதியகன்றகைபெதே

(இ - ள்.) கல் - மலையினை, கறை - விடத்தினை, அத்ம் - பொன்னாகிய, நல் - நல்ல, நீள் - நீண்ட, சிலை - (முறைபே) வில்லாகவும், கண்டர் - கழுத்திற்கறையாகவுமுடையவர்டியினில் - சுந்தரர்கலியாணத்தில், நகற்கு - நகலோலைக்கு, றைய - சொல்ல, தன் - தனது, அத்தத்து - கையினிடத்து, டையச்செய்-பொருந்தச்செய்த, கதம் - கோபத்தைவாய்ந்த, டம் - நீண்ட, சிங்கன் - சிங்கம்போன்றவன், கல் - படித்துக்கொள்வது, தைய - உறுதிப்பட, தனம் - திரவியமும், தந்திடம்பாதித்துக்கொடுக்க, சென்றனன் - போனவன், காண்கிலைனது வருத்தமறிந்திலை, இகற்கு - இந்தச்சத்துருவாகிய எனக்கு, அறை - குகையும், அத்தம் - வனமும் சூழ்ந்தமலையின், ங்கைக்கு - பெண்ணுக்கு, ஆதியகன் - ஒற்றியூரன், தகையது - கிருபையானது, எதே - எந்தவிதமோ, எ - று. [தலைவியிரங்கல்.] (அக)

கையனசலச்சிலையேந்தியகணைகாதினர்ந
கையன்சலச்சிலைக்காதணுதியகன்றனைத்த
கையனசலச்சிலையிந்நங்கையின்காதலினி
ஙகையனசலச்சிலையிலாணீங்கினள்காணலெதே.

(இ - ள்.) அசலம் - மலையினை, சிலை - வில்லாக, ஏந்திய - தாங்கிய, கையன் - கரத்தினன், கண்ணே - நேத்திரமே, காதினர் - செவியாகவுடையபாம்புகளை, நகை - ஆபரணன், அல் - இருள், நச்சு - நைய, அலச்ச - அலைக்கும்படியாகிய, இலை - இலைகள்பொருந்திய, கா - சோலைநிறைந்த, தண்குளிர்ந்த, ஆதியகன்றனை-ஒற்றியூரானை, தகைய - தகைமையுடன், நச்சல் - விரும்பினதினால், அச்சு - பிராணன், இலை - இல்லை, இந்த - இந்த, நங்கையின் - பெண்ணின், காதலின் - ஆசையினது; இகை - இயல்பு, அனசலம் - சாதத்தின் ரசத்தை, சிலையிலாள்-பேச்சில்லாதவள், நீங்கினள் - உண்ணவில்லை, காணல்-(அவனைப்) பார்த்து நலம்பெறுதல், எதே - எதுவே, எ - று. [நற்றாயிரங்கல்.] (அஉ)

காணநலக்கதிசீரினைநானெந்தக்காலநெஞ்சே
காணநலக்கதியார்கலிதீர்ந்திடல்காழநெற்கள்
காணநலக்கதினேர்காற்கரியதழ்கற்சிலையே
காணநலக்கதிர்க்காநிரையாதியகன்னிதியே.

(இ - ள்.) காணநான் - நான்பாக்க, நலம் - நல்ல, க
மோட்சத்தின், சீரினை - சிறப்பை, எந்தக்காலம்-எப்பொழு
நெஞ்சே - மனதே, காண் - அறிவாய், அனலம் - அக்கி
யின், கதி - வேகத்தைப்போல, ஆர் - நிறைந்த, கலி - (நம
வறுமை, தீர்ந்திடல் - நீங்குதலுக்கு, காழ - வலிமையாகி
நெற்கள் - நெல்லுகளையும், காணம் - கொள்ளினையும், அலக்கு
அலைச்சல்செய்யும், அதின் - அந்த(உரலினுக்கு), நேர் - ஒப்ப
கிய, கால் - பாதத்தையுடைய, கரி - யானையின், அதள் - தே
லையும், கல் - மேருவினை, சிலை-தனுவாகவுமுடைய, காணன்
பொன்னினுக்குச்சமானமானவன், அல்-இருள்சூழ்ந்த, அ-அ
கதிர்-விளங்கிய, கா-சோலைகள், நிரை - நிரைந்த, ஆதியகன்
ஒற்றியூரன், நிதி - நம்செல்வமாகும், எ - று. நமது வறுமை
நீங்க ஒற்றியூரனம் செல்வமெனக்கூட்டுக. (அ

கன்னிதினகரன்சாய்ந்தகளங்கன்கதிர்செறியி
கன்னிதினகரக்காதலைத்தந்தநற்காட்சியனக்
கன்னிதினகரந்தான்றலையையக்கரன்கரிக்கா
கன்னிதினகரத்தண்ணுதியன்கையங்காரகனே

(இ - ள்.) கன்னி - (நமது) பெண்ணினுக்கு, தினகரன்
சூரியன், சாய்ந்து - மேற்றிசையிலடங்கி, அகளங்கன் - சந்தி
ரன், கதிர் - கிரணங்களுடன், செறி - நெருங்கி, இகல் - வ
மையின், நிதி - நியாயம், நகர - அதிகப்பட, காதலை - ஆசை
யை, தந்த - கொடுத்த, நல் - நல்ல, காட்சியன் - தோற்றம
னவன், நக்கன்-(புரத்தைநோக்கி) சிரித்தவன், இதில் - இந்
எழுத்துகளில், நகரந்தான் - நகரவெழுத்து, தலை - முதலா
வுடைய, ஐ-பஞ்சாக்கரமாகிய, அக்கரன்-எழுத்தினன், கரி-யா
னைக்கூட்டங்கள், கா-சோலைகளில், கன்னி-கனிந்துசிந்தியப

பழங்கனி, தின் - புசிக்கின்ற, நகர் - ஊராகிய, அ - அந்த, தண் - குளிர்ந்த, ஆதியன் - ஒற்றியூரன், கை - தன்கையில் அங்காரகன் - அக்கினியான். எ - று. (அச)

காரகநத்தங்கரத்தினனாசனக்கஞ்சனல்லங்
காரகநத்தங்கரத்திலராகரக்காசினியை
காரகநத்தங்கரத்திரனாய்ச்செயகண்டிதர்ந
காரகநத்தங்கரத்திதண்ணாதியகக்கனரே.

(இ - ள்.) காரகம்-சலத்திலிரானின்ற, நத்தம் - சங்கேந்திய, கரத்தினன்-கையையுடைய விண்டுவினது (கண்ணும்), ஆசனம் கஞ்சன்-இருப்பிடம் தாமரையாக்கொண்ட பிரமனது (கபாலமும்), நல்-நல்ல, அங்காரகன்-அக்கினியேந்திய, அத்தம்-கையினைவாய்ந்த, கரத்திலர்ஆகர்-ஒளிக்காதவராகிய தேகத்தர், அ-அந்த, காசினியை-பூமியை, கா-காத்த,ரகு-இராமர், அனத்தம்-யுத்தத்தில், கரம் - விஷத்தைப்போல, திரனாய்-வீரனாய், செய - செய்யும்படியாகிய, கண்டிதர்-நெறியைத்தந்தவர், நகாரம்-நகரவெழுத்து,கனத்து-முதலில்மேன்பாடாகிய பஞ்சாட்சரத்தின், அங்கர்-உருவர், அத்தி-அத்திமரஞ்சூழ்ந்த, தண்-தண்ணிய, ஆதியகம்-ஒற்றியூரின், கனர்-மேன்பட்டவர். எ-று.

கக்ககக் கக்கைக் ககிக்கக் ககக்கக் கைக்ககக்கா
கக்ககக் கக்கைக் ககிக்கக் கிகைக்கக் ககக்கக்ககா
கக்ககக் கக்கைக் ககிக்கக் ககக்கக்கி கக்கிகக்கை
கக்ககக் கக்கைக் ககிக்கக்காக் கைக்ககக் கக்ககக்கே.

(இ - ள்.) கக்கு - வரம்பு, அக - கடந்துவந்த, கங்கைக்கு-நகிக்கும், அகி - பாம்பினைப்படுக்கையாக, கம் - மேகநிறம் வாய்ந்த, ககக்கு-பாணமாகின்ற,அகம்-இடமகன்ற,கைக்கு - கரத்தில்விண்டுவுக்கும், அகக்கு ஆகம் - மனையாளுக்கும் (இடமீந்திருப்பவர்), ஆகம்-சரீரத்தில், ககம்-அன்னபட்சிக்கு, கம்கு-தலைமையாயிருப்பவனாகிய,ஐக்கு-பிரமனுடையபடைப்புக்கும், அகி - கரும்பொன்னுக்கும், கம்கு - வெண்பொன்னுக்கும்,

ஈகை - செம்பொன்னுக்கும், கக்கு- ஆசைவெறுக்கும், அகக்கு- மனத்தையுடைய தவத்தினரிடத்து, அக்கம்-சோமசூரிய அக்கினிபோல்பவர், காகம் - காக்கையானது, ககக்கு- ககவென்னும் ஓசையுடன், அங்கு - அவ்விடத்தில், ஐ - அழகாக, ககி - கக்கிக்கரைவதும், கம் - கடல்சூழ்ந்த, கு - பூமியின், அகக்கு - மத்தியிலுண்டான, அங்கி - நெருப்பை, சக்கி - நீங்கிவிடச் செய்ததும், கம் - ஆன்மாவாகிய பசுக்கள், கை- ஒழுங்காகிய, கங்கு - ஆகாயம் பூமி, அகக்கு - முதலிய இடத்தில், அம்-அழகாகிய, கைக்கு - அலங்காரத்துடனே, அகிக்கு - வாழ்கின்றதற்கும், அம் - அன்புடனே, கங்கு - ஏதுவான பிரமபுரியாகிய ஒற்றியூரின், அகக்கே - இடத்தினருக்கே, காக்கைக்கு-நம்மை இரட்சிப்பதற்கும், அகம் - மனதினையுடையவர். எ - று.

கக்ககனந்தாரணிநளினக்கண்ணன்கஞ்சனிரை
கக்ககனக்தாரணியக்கழனிதண்காக்களின
கக்ககனந்தாரணிதிகழாதியகன்கரிசை
கக்ககனந்தாரணிந்தனனேலளிக்காரியனே.

(இ - ள்.) கம் - தலைமையாகிய, ககனம் - விண்ணுலகத்தாரும், தாரணி-பூலோகத்தாரும், நளினம்-தாமரைபோன்ற, கண்ணன் - நேத்திரனுகியவிண்டுவும், கஞ்சன் - பிரமனும், நிரை - சூழ்ந்து (வாழுவதும்), கங்கு - வரம்பினது, அகம் - இடத்தில், நந்து - சங்கினங்களும், ஆர் - ஆத்திமரங்களும், அணிய - நெருங்கி, கழனி - வயல்சூழ்ந்த, தண் - குளிர்ந்த, காக்களின் - சோலைகளின், அகம் - இடத்தில், ககம் - பறவைகள், நம் - நல்ல, தார் - ஒழுங்காக, அணி- அழகானது, திகழ் - விளங்குவதுமான, ஆதியகன் - ஒற்றியூரன், கரிசை (நம்பெண்ணின்) குற்றத்தை, கக்க - நீக்க, கனம்-மேன்மையான, தார் - (அவரது) அலங்கலை, அணிந்தனனேல்-தரிப்பாராகில், அளி - கிருபையின், காரியனே - காரியமானவனே. எ - று. (நற்றூயிரங்கல்).

(அவ)

காரியனங்கையடர்சடையாய்நண்கழனிதிகழ்
காரியனங்கையங்காநிரையாதியகாகன்னனற்
காரியனங்கையனையரிங்கில்லைகலியறசிங்
காரியனங்கையலின்கணியங்ககனந்தரற்கே.

(இ - ள்.) கார் - நீரென்னும், இயல் - தன்மையாகிய, நங்கை - கங்கையானது, அடர் - நெருங்கிய, சடையாய்-சேகரனே, தண் - குளிர்ந்த, கழனி - வயல்களும், திகழ் - விளங்கிய, கார்-மேகங்களின், இயம் - ஒலியும், நம் - நல்ல, கயம்-தடாகங்கள்சூழ்ந்த, கா - சோலைகளும், நிரை - ஒழுங்காக நிரைந்த, ஆதியகா-ஒற்றியூரா, கன்னன்-கன்னனைப்போலும், நல் - நல்ல, காரியன் - காரிவள்ளலின், அங்கை - உள்ளங்கையை, அனையர் - ஒப்பானவர், இங்கு-இக்காலத்தில், இல்லை கலியற-(எனது) தரித்திரத்தைநீக்கவொருவருமில்லை, சிங்காரி-அழகினளும், அனம்-அம்சநடையாளும், கயல் - கெண்டையையொத்த, இன் - இனிதாகிய, கணி - விழியாளுமாகிய அம்மையார், அங்க - பாகனே, கனம் - மேன்மை, தரற்கே - தருவதற்கே. எ-று. மேன்மை தருவதற்கே கிருபைசெய்யெனக் கூட்டுக. (அஅ)

கனந்தரனகத்திரியகந்தீயக்கடிசெயன
கனந்தரனகத்திரியநிந்தைதனைக்காய்ந்தநலங்
கனந்தரனகத்திரியதண்ணுதியகன்கரத்திற்
கனந்தரனகத்திரியஞ்சிலையன்கழலடியே.

(இ - ள்.) கனந்தர - மேன்மைதரும்படி, நக - சிரித்ததினால், திரியகம் - முப்புரமானது, தீய - எரிய, கடிசெய் - கோபிக்கா நின்ற, அனகன்-களங்கமில்லான், அந்தரன் - இந்திரனுடைய, அகத்து - மனதில், இரியநிந்தைதனை - நிந்தனைகள்கெட, காய்ந்த - எரிந்த, நல் - நல்ல, அங்கன் - தேகத்தை வாய்ந்தமன்மதன் தந்தையான, நந்தர் -சங்கையுடையவிண்டு, அனகம் - பரிசுத்தமாக, திரிய - வந்துலாவும்படியான, தண் - தண்ணிய, ஆதியகன் - ஒற்றியூரன், கரத்தில் -(அவரது) கைவி

ணிடத்தில், கனம் - பருத்த, தரம் - வலிமையாக, நகு - விளங்கிய, அத்திரி - மலையான, அம் - அழகாகிய, சிலையன் - வில்லையுடையானது, கழல் அடியே-வீரகண்டாமணியணிந்த பாதமே துணை. எ - று. (௪௯)

கழலந்தனிநிழலின்கதியென் றரிகஞ்சனண்டர்
கழலந்தனிநியஞ்சீர் திகழுக்காகழனியிற்றி
கழலந்தனிநிதியாதியகாதெக்கணநிலநி
கழலந்தனிநியெண்ணுதளியாககங்காளநன்றே.

(இ - ள்.) கழல்-(தேவரீரது) திருவடியின், அம் - அழகிய, தனி - ஒப்பற்ற, நிழலின் - நிழலதுவே, கதியென்று - கதியென்று, அரி - விண்டுவும், கஞ்சன் - பிரமனும், அண்டர் - இந்திரனும், கழல் - சொல்லும்படியாகிய, அந்த - அத்தன்மையான, நின் - உனது, நியம் - நிசமாகிய, சீர் - சிறப்பானது, திகழ் - விளங்கியதும், கா - சோலைகளும், கழனியில் - வயல்களில், திகழ-விளங்கிய, அலந்தனில்-கலப்பையினிடத்தில், நிதி - திரவியம் தோன்றுவதுமான, ஆதியகா - ஒற்றியூரனே, தெக்கணநிலம் - தென்பாரிசத்தில், நிகழ் - சஞ்சரிக்கின்ற, அல் - இருண்ட, அந்தன்-எமன், இனி-இனிமேலாகிலும், எண்ணுது - (என்னை)நினையாதிருக்கும்படி, அளி-கிருபைசெய்வாய், ஆகம் - தேகத்தில், கங்காள - முழுவெலும்பினனே, நன்றே - (அங்ஙனஞ்செய்தல்) நலமேயாகும், எ - று. (௫0)

காளக்களத்தரன்றங்கச்சிலைச்சிலைக்கைத்தலனெக்
காளக்களத்தரநல்லிசையாதியகன்ஸரிறங்கங்
காளக்களத்தாத்தன்செய்யநளினக்கன்னியினக்
காளக்களத்தரணியடையாதளிகட்டளையே.

(இ - ள்.) காளம்-விஷம்பொருந்திய, களத்தரன் - கண்டத்தையுடையசிவன், தங்கச்சிலை - தங்கமலையினையே, சிலை - வில்லாகவேந்திய, கைத்தலன் - கையினன், எக்காளம் - எக்காளவாத்தியத்தினது, களம்-கூட்டத்தின், தரம்-பலத்த, நல் - நல்ல, இசை - இராகம்பொருந்திய, ஆதியகன் - ஒற்றியூரன்,

நிறம் - மார்பில், கங்காளங்கள்-முழுவெலும்புகளைத்தரித்த, அ- அந்த, தரத்தன்-வரைபோன்ற மார்பினன், செய்யகளினம் - சிவந்ததாமரையிலிரான்ற, கன்னியின் - இலக்குமியின், அக் காள்-தமக்கையான் மூதேவியிருக்கின்ற, அ - அந்த, களம் - கள்ளத்தன்மையாகிய, தரணி-இடத்தினில், அடையாது-சேரா மல், அளி-நமக்குஅருளும், கட்டளையே - அதுஅவர்வற்பாடே. எ - று. (கூக)

கட்டளையந்தரங்காத்திடலென்றனைக்காணியிலங்
கட்டளையந்தரந்தன்னைக்கடந்திடக்காசிலைய
கட்டளையந்தரந்தைக்கென்செயநற்கறையதனிற்
கட்டளையந்தரக்கண்ணநேராதியகாநலனே.

(இ - ள்.) கட்டளை-நினதுகட்டளையின், அந்தரம்-முடி வாகியது,காத்திடல் என்றனை-என்னைக்காப்பாத்துதல், காணி- உனதுசொந்தம், இலங்கள் - மனைவிமுதலாகியசுற்றத்தாரின், தளை - தொடர்பினது, அம்-அழகிய, தரந்தன்னை-உறுதியினை, கடந்திட-நீந்திவர, காசிலை - திரவியமில்லை, அகட்டு - வயற் றில், அளை- பொருந்திய, அந்து - அந்துப்பூச்சையொத்த பசி யின், அரந்தைக்கு-துன்பத்திற்கு, என்செய - நான்என்னசெ வேன், நல் - நல்ல, கறையதனில் - உறவில், கட்டுஅளை-வெண் ணெய்க்காக பிணிப்புண்ட, அம் - அந்த, தரம் - மலைபோன்ற, கண்ணன்-விண்வோனவர், நேர்-வந்துவாழ்ந்த, ஆதியகா-ஒற்றி யூரனே, நலனே-எனையாளுதல் நன்மையே. எ - று. (கூஉ)

கானலங்காரகந்தாக்கரிசிங்கங்கலந்திலங்கக்
கானலங்காரகலாகிரையாதியகாநிகழ்நக்
கானலங்காரகன்கையற்றிடச்செயங்கத்தனேனைக்
கானலங்காரகஞ்சென்னியாரத்தியாகாநிதனே.

(இ - ள்.) கான் - வாசனைகளுஞ், அல்-இருண்ட,கார்- மேகங்களுஞ்சூழ்ந்த, அகம் - இடத்தில், தா-தாவுகின்ற, கரி - யானைகளும், சிங்கம் - சிங்கங்களும், கலந்து - சூழ்ந்து, இலங்க - பிரகாசிக்க, கானல் - காடுகள், அங்கு-அவ்

விடத்தில், ஆர் - நிறைந்து, அகலா - நீங்காத, நிரை - ஒழுங்காகிய, ஆதியகா - ஒற்றியூரா, திகழ் - விளங்கிய, நக்கா-சிரிப்பினையுடையவனே, நல் - நல்ல, அங்காரகன்-அக்கினிதேவன், கையற்றிட - கையறும்படி, செய் - செய்த, அம் - அழகிய, கத்தன் - கர்த்தனையிருப்பவனே, எனை - என்னை, கா - இரட்சிப்பாய், நலங்கு - நலங்கும்படியாகிய, ஆர - மாலையானே கம் - வெளுத்த, சென்னி - சிரசுகளும், ஆர்-நிறைந்த, அத்தி-எலும்பையுமுடைய, ஆகா - தேகனே, நிதனே - நித்தியனே. எ - று. முதலடியெதுகையில் அம் அசை. (௬௩)

காநிதநந்தலையார்கடலாதியகாகடிகள்
காநிதநந்தலையாகத்தடையாளகாசகன்ற
காநிதநந்தலையாத்திநதியாகனத்தநல்ல
காநிதநந்தலையாற்றியடிநிழல்காணனன்றே.

(இ - ள்.) காநிதம் - காப்பாய் தினந்தோறும், நந்து - சங்குபொருந்திய, அலை - திரைகள், ஆர் - நிறைந்த, கடல் - கடல்சூழ்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, கடிகள் - பேய்கள்சூழ்ந்த, காளி - சுடலையாடிய அம்மையின், தனம் - முலைகள், தலை - முதன்மையாக, ஆகத்து - தேகத்தில், அடையாள - அடையாளமானவனே, காசகன்ற - குற்றம்நீங்கிய, கான் - வாசனைபொருந்திய, இ - இந்த, தனம் - திரவியம்போல, தலை - சிரசில், ஆத்தி - ஆத்திமாலையும், நதியா - கங்கையும் அணிந்தவனே, கனத்த - மேன்மைப்பட்ட, நல்ல - நன்மையாகிய, கான் - ஞானம், இது - இதுதானென்று எனக்குக்காட்டி, அநந்தலை - (எனது) வருத்தத்தை, ஆற்றி - தணித்து, அடி - (உமது) திருவடியின், நிழல் - சாயலை, காணல் - (நான்) காணும்படி, நன்றே - (கொடுத்தல்) நலமே. எ - று. (௬௪)

காணனனந்தலையிற்கரஞ்சேர்த்தினகங்கவிந்தே
காணனனந்தலையிங்கறத்தாளினங்காதரணி
காணனனந்தலையின்றடத்தாதியகாநிதசெங்
காணனனந்தலையிற்றிடக்கிட்டிக்கழறினன்றே.

(இ - ள்.) காண - தரிசிக்கும்பொருட்டு, நனந்தலை-சிரசின் உச்சியின், இல் - இடத்தில், காஞ்சேர்த்து - கைகூப்பி, இன் - இனிதாகிய, அகம் - மனது, கனிந்து - உருகி, ஏகாள் - ஒப்பற்றவளாகி, நன் - நல்ல, அனம் - சாதம், தலை - ஆகியாகிய, இங்கு - இவ்விடத்தில், அறத்தாளின் - முப்பத்திரண்டறம்வளர்த்த பார்வதியின், அங்கா-உருவனே, தரணி-புவியில்வாழும், அனம்-அம்சங்களும், நந்து-சங்குகளும், அலையின்-திரையிலிரானின்ற, தடத்து - குளங்கள்வாய்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, நித - நித்தனே, செம் - சிவந்த, காணம்-திரவியத்தின், நல் - நன்மையை, நந்தலை - நம்மிடத்தில், ஈந்திட - கொடுத்திட, கிட்டி - நெருங்கி, கழறின் - துதிப்பாயாகின், நன்று - (மனமே) நலமேயாகும். எ - று. மூன்றுமடி யெதுகையில் காண் அசை. (கூரு)

கழறினநஞ்சங்கனிந்தேத்திநின் றன்கலங்கலென்றே
கழறினநஞ்சங்கடர்தடந்தேங்கனிக்காண்டநன்கி
கழறினநஞ்சங்கதிநிரையாதியகாநிதிதி
கழறினநஞ்சங்களச்சங்கரசங்கதியளியே.

(இ - ள்.) கழல் - நின்திருவடியை, தினம் - எந்நாளும், நஞ்சம் - மனத்தினால், கனிந்து - உருகி, ஏத்தி - துதித்து, நின்றன் - இருந்தனன், கலங்கல் - நீ வருந்தப்படாதே, என்றே - என்றே, கழறு - (ஆதரவு) சொல்லுவாய், இன் - இனிதான, அனம் - அம்சங்களும், சங்கு - நந்துகளும், அடர் - நெருங்கிய, தடம் - தடாகத்தில், தேங்கனி - தென்னம்பழத்தின், காண்டம் - சலமானது, நன்கு - நன்றாக, இகழ் - இறங்க, அறின் - தெரியும்வண்ணம், நனைஞ்சு - நனைந்து, அங்கு - அத்தடாகத்தில், அதி - நீர் அதிகம், நிரை - நிறைந்த, ஆதியகா - ஒற்றியூரா, நிதி - (அடியார்) நியாயம் (தெரியும்வண்ணம்), திகழல் - விளங்கும்படி, தின - புசித்த, நஞ்சம் - விஷத்தை, களம் - கண்டத்தில்வாய்ந்த, சங்கர - பரமனே, சங்கதி - (சகல) காரியத்தினுக்கும், அளியே - கிருபையாயிருப்பவனே. எ - று. (கூசு)

கதியளிசங்கரகாளகண்டத்தநீள்காச்செயிடங்
கதியளிசங்கரற்றற்றகையாதியகாதிகழ்சங்
கதியளிசங்கரந்திட்டதைத்தீர்ந்தார்காழநிறச
கதியளிசங்கரகந்தையைநீங்கிகனநிலைக்கே.

(இ - ள்.) கதி-மோட்சத்தை, அளி - தருவாய், சங்கர - சங்கரனே, காள - விஷம்பொருந்திய, கண்டத்த - மிடற்றினனே, நீள் - நீண்ட, கா - சோலையிலும், செயிடம் - கழனியிலும், கதி - வேகத்துடன், அளி- வண்டுகளும், சங்கு - நந்துகளும், அரற்றல் - சத்தித்தலாகிய, தகை - தகைமைசேர்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, திகழ் - விளங்கிய, சங்கதி - எனதுகாரியம் பலிக்கும்படி, அளி - காப்பாய், சம் - இனிமையானது, கரந்திட்டதை - ஒளித்திட்டனத, தீர்ந்த - நீங்கிய, ஆர்-மாலையணிந்த, காழ - வலிமையாகிய, நிற - மார்பனே, சகதி - உலகத்திமையில், அளி - அன்புகொண்ட, சங்கர் - கூட்டத்தாரின், அகந்தையை - வருத்தத்தை, நீங்கி - ஒழித்து, கனம் - மேன்மையாகிய, நிலைக்கே - நிலைமைக்கே கிருபை செய்வாய். எ - று. (கூஎ)

கனநிகரந்திடத்தாரிலைநீயெனைக்காத்திடன
கனநிகரந்திடத்தானெவ்காரியங்காயநிறக்
கனகிகரந்திடத்தார்சகரந்தானகதிரிடையைங்
கனநிகரந்திடத்தாதியகத்தகரந்தனையே.

(இ - ள்.) கனன் - கன்னனுக்கு, நிகர் - ஒப்பான, அம் - அழகிய, திடத்தார்-உறுதிகொண்டவர், இலை - (இக்காலத்து) இல்லை, நீ - தேவரீரே, எனை - என்றனை, காத்திடு - இரட்சிப்பாய், அனக - களங்கமில்லாதவனே, கனி - (என்மீதுள்ள) விருப்பத்தை, கரந்திட - ஒளித்திட, எனகாரியம் - என்னபிரயோசனம், காயம்-தேகத்தின், நிறம் - வன்னமானது, கனன் - அக்கினியானே, இகரம் - இகரவெழுத்தின், திடத்து - திட்டத்தில், ஆர் - நிரைந்த, சகரந்தான் - சகரமெய்யெழுத்தானது, கதிர் இடை - விளங்கியநடுவில், ஐ-ஐர்தக்கரம்வாய்ந்த, கனன்-

டருந்தவனே, இகர் - இப்பூமியிலுள்ள, அந்த இடத்து - நெல்லத்தின் சமானமானவரிடத்து, ஆதியகத்த - ஒற்றியூரா, கரந்தனையேயொளித்திருந்தனையே. எ - று. இரண்டாமடி யெதுகையில் தான் அசை. (௯௮)

கரந்தலைக்கண்ணறைந்தேயலைந்தேனெனைக்காக்கிலையே
கரந்தலைக்கண்ணறைந்தேயலைந்தேனெனைக்காக்கிலையே
கரந்தலைக்கண்ணறைந்தேயலைந்தேனெனைக்காக்கிலையே
கரந்தலைக்கண்ணறைந்தேயலைந்தேனெனைக்காக்கிலையே.

(இ - ள்.) கரம் - கைகளைச்சேர்த்து, தலைக்கண் - சிரசில், அறைந்தே - மோதி, அலைந்தேன் - பரதவித்தேன், எனை - என்றனை, காக்கிலை - இரட்சிக்கவில்லை, கரந்து - ஒளித்து, அலைக்கு - அலைச்சல்செய்யும், அண்ணல் - நமனானவன், தை - அழுந்த, தேயல் - அழிந்திடச்செய்யும், ஐ - பஞ்சாட்சரத்தையுடைய, தேன் - மதுரமே, எல் - பிரகாசமானது, நை - குறைந்த, காக்கு - சோலைக்கு, இலையே - தழைகளே, கரம் - கிரணங்களாகவுடைய, தலை - ஆதிபுரியென்னும், கண் - அகன்ற, அறை - வீட்டையுடைய, தே - கடவுளே, அலைந்தேன் - சோம்பலுற்றேன், நெல் - அழுக்கை நீக்கி, நல்லினது, நை - குத்திய அரிசியினால் சாதக்கட்டு பொருந்தியெடுக்கும், காக்கில் - தோட்சுமைக்கு, ஐ - அழகானவனே, ஏகா - ஏகனே, அந்தலை - அழகிய வீடு, கள் - தேனும், நறை - மணமும், தேயல் - தேசும்வாய்ந்த (கஞ்சத்தின்மேலிராநின்ற), ஐ - தலைவனாகிய பிரமனும், தேன் - அழகிய, ஏனை - பன்றியாகிய விண்டுவும், காக்கு - மதிலைச் சூழ்ந்து கொண்டிருக்கும், இல் - மோட்சவீட்டிற்கு, ஐயே - சுவாமியே, எ - று. (௯௯)

காக்கிலையங்கரநேர்க்கதண்ணாதியகாநணிநீ
காக்கிலையங்கரநேயன்கழலறக்காண்கனநா
காக்கிலையங்கரநேகரைக்காத்தாய்கதிரனத்தின்
காக்கிலையங்கரநேயரியானககனலனே.

(இ - ள்.) காக்கு - சோலைக்கு, இலை - இலை, அ - அந்த, கரம் - (சூரியனது) பிரகாசமென்ன, சேர்ந்த - கிடைத்த, தண் - குளிர்ந்த, ஆதியகா - ஒற்றியூரா, நணி - அடியேனிடத்தில் பொருந்தி, நீ - தேவரீர், காக்கிலை - இரட்சிக்கவில்லை, அம்-அழகிய,கரம்-கையைமேலேபோட்டுக்கொள்ளும், நேயன்-தோழனாகிய குபேரன், கழல்- அம்மையாரின் காலைப்பார்த்து, அறக்காண்- மிகக்கண்கெட்டபோது காத்தவனே, கனம்-மேன்மையாகிய மெய்யையுடைய,கா-காவை, காக்கு - கெடுதலில்லாதவர்கள்,இல்-இறக்குங்காலத்தில், ஐ-சேத்துமத்தில் அழுந்திய, அங்கர்-உருப்பினைவாய்ந்தவர்கள், அனேகரை- அனந்தம்பேரை, காத்தாய்-இரட்சித்தாய். கதிர்-விளங்கிய, அனத்தின்-கட்டுசோதத்தின், காக்கில்-தோட்சுமைக்காக, அயங்கு - ஐசங்கிய, அரனே-சிவனே, அரியான-விண்டுவாகிய, ககம்-பாணத்தையுடைய, கலனே - நன்மையானவனே, எ - று. (௧௦௦)

திருவொற்றியூரென்னும்

ஆதிபுரி

நிரோட்டககரயமகவந்தாதி

மூலமும் உரையும்

முற்றிற்று.

ஸ்ரீ

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	ககூ	அக்ரு	அக்கும்
ங	அ	அணங்க	அணங்கு
ரு	கசு	செய்ய	செய்யா
அ	க0	அதர	அதிர
க0	உரு	சஙகம்	சங்கன்
கஉ	உகூ	டயக	டய்யக
”	ஙூ0	தான்	தான
கச	எ	ணிங்கி	ணீங்கி
”	உச	டினர்	டியர்
”	உஅ	(நகத்தினுலும்)	நகத்து-நகத்தினுலும்
கசு	ககூ	காத்த	தாத்த
”	உஉ	கநிழ்	திகழ்
”	உச	என	என்
”	ஙங	யந்த	யத்த
கஎ	ரு	அகத்தன்	அகத்ததன்
”	அ	நடத்தின்	கடத்தின
கஅ	உஎ	கன்னி	கல்கன்னி
”	உஅ	அன	அன்
”	உகூ	அகமநீ	அகநீ
ககூ	ரு	தாநகர்	தாகர்
”	க0	காண	காண்
”	கச	கம	கம்
”	கரு	காழ	காழ்
”	கசு	கலைய	கலையன்
உ0	க0	னேயன்கண்	னேயனக்கன்
”	கஅ	தனத்தன	தனதன்
”	உகூ	கரியகை	கரியதகை
உக	கஎ	தனி	தகனி
”	ஙூ0	நகர்	நகா
”			
உஉ	உஉ	சிதலருநிய	சிதலேகிய
”	உஎ	னையத்த	னைய
உங	உ	னைசிதலறு	ங்கசிதலேகிய
”	கூ	ஞட்டினகம்	ஞட்டகம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௪	௧௧	கநக்கார்	நக்கார்
,,	௨0	சங்கரம்.	சங்கர்
௨௫	௩	கத்தனர்	கத்ததனர்
,,	௨௧	செய	செய்
௨௮	௯	தந்ததகளி	தந்தகளி
,,	௨௭	தண்ணய	தன்னய
௩௨	௧0	கரவிலேயே	காவிலேயே
௩௩	௧௪	நன்ருய	நன்ருய்
௩௪	௩௩	ஆதிய	ஆதியக